
www.tamilarangam.net
தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்

ஆடி – ஆவணி 1990. அன்பளிப்பு : ஒன்றரைப் பவுண்டுகள்

# பனிமலர்

புதியதொரு தமிழ்ச் சஞ்சிகை



## என்று முடியும் எங்கள் ஈழ விடுதலைப்போர்?

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| இலங்கை | இலவசம் | கனடா | C$ 4.00 | குவெய்த் | 900 Fls | நைஜீரியா | N 4.00 | சிங்கப்பூர் | S$6.00 |
| இந்தியா | Rs.10 | டென்மார்க் | DKr 22. | லெபனான் | L£ 100 | நோர்வே | NKr 22 | சுவீடன் | 20 Kr |
| அவுஸ்திரேலியா | A$ 4.00 | பிரான்ஸ் | FFr 15 | மலேசியா | M$ 6.00 | ஓமான் | R 1.00 | சுவிற்சிலாந்து | SFr 5.00 |
| பெல்ஜியம் | BFr 110 | ஜேர்மனி | DM 6.00 | மொறிசியஸ் | Rs.15 | பப்புவா நியூ கினி | Kina 3.00 | ஐக்கிய அரபு இராச்சியம் | Dir 11.00 |
| புருணே | B$ 6.00 | இத்தாலி | Lr 4000 | நியூசிலாந்து | NZ$ 6.50 | சவூதி அரேபியா | 12 Rls | பிரித்தானியா | £1.50 |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பனிமலரின் பணிதொடர வாழ்த்துக்கள்!

கனடாவிலிருந்து
ஒரு அன்பர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நான் பழைய சீன இலக்கியங்களையும் கதைகளையும் தொடர்ந்து படித்துப் பார்த்தேன். அந்த இலக்கியங்களில் ஒரு குறிப்பிட்ட விசயம் இருப்பது எனக்குப்பட்டது. நிலத்தை உழுத உழவர்கள் அதில் இல்லாமல் இருந்ததே அது. படைத் தலைவர்கள், அதிகாரிகள், அறிவாளிகள் ஆகியோர்களே அதில் பாத்திரங்களாய் இருந்தனர். ஒரு விவசாயிகூட அதில் நாயகனாக இல்லை. இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக இது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அதற்கப்புறம் அந்தக் கதைகளின் உட்கருவை அலசிப் பார்த்தேன். அப்படிப் பார்த்ததில் அவர்கள் எல்லாம் ஆயுதங்களைப் பெற்ற புகழ் வாய்ந்த மனிதர்களாக இருந்தனர்.

*மாவோ*

பனிமலர்

புதியதொரு தமிழ்ச் சஞ்சிகை

ஆடி-ஆவணி 1990.

எமது மக்களின் 'பரிபூரண' விடுதலையை விரும்பும் தமிழ்பேசும் தேசபக்த சக்திகள் பலரின் கூட்டுமுயற்சியே 'பனிமலர்' ஆகும். 'பனிமலர்'ல் இணைந்து செயலாற்ற விரும்பும் அனைவரும் விரும்பி வரவேற்கப் படுகின்றனர்.

எழுத்துப் பதிவு:
இ.குருநாதன்.
New Malden, Surrey.
Tel: 081 949 8185

அச்சுப் பதிப்பு:
ஆர்கே பிரிண்டேர்ஸ்
Tadworth, Surrey.
Tel: 0737 813774

வெளியீடு:
தமிழ்மக்கள் புதிய கலாச்சாரக் குழு
BCM POLARIS
LONDON WC1N 3XX.

## அப்பாவி மக்களைக் கொலை செய்வதை உடன் நிறுத்துங்கள்!

தமிழ் மக்கள் அனைவரையும் அழித்தொழிக்கும் வேலைகளை மீண்டுமொருமுறை ஆரம்பித்துள்ளது இனவெறிபிடித்த இலங்கை அரசு. ஐம்பதினாயிரத்திற்கும் அதிகமான அப்பாவிச் சிங்கள மக்களைக் கொன்றொழித்துத் தென்னிலங்கைப் பயங்கரவாதத்தினை முறியடித்த முறையிலேயே, இன்று தமிழ் மக்கள் மீதும் அரச பயங்கரவாதம் அவிழ்த்து விடப்பட்டுள்ளது. 'அநாதரவாக' விடப்பட்ட அப்பாவிக் கிழக்கு மாகாண மக்களே அதிகளவில் அழிந்து கொண்டிருப்பது 'பயங்கரவாதத்திற்கு எதிரானதொரு போர் மட்டுமே, இது' என்ற இப் பேரினவாத அரசின் ஆசைகளை மேலும் அம்பலமாக்கியுள்ளது.

அரச பயங்கரவாதத்திற்குப் பதிலடியாக எல்லைப் புறக்கிராமங்களிலுள்ள சிங்களப் பொதுமக்கள் சிலரும் கொலைசெய்யப் பட்டதாகப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

நிராயுத பாணிகளான மக்களைக் கொல்வதை நிறுத்தி, மீண்டும் இரு சாராரும் அறிவு பூர்வமான - பகிரங்கமான பேச்சவார்த்தைக்குத் திரும்பவேண்டுமென்று இன்று பரவலாக அதிகரித்து வரும் குரல்களுடன் 'பனிமலரும்' இணைந்து கொள்கிறது.

அநியாயமான உயிர் இழப்புகளைத் தடுத்து நிறுத்துங்கள்!

## யாதும் ஊரே

*போர்த்துக்கேயரும் டச்சுக்காரரும்*
*ஆங்கில நாட்டரும் ஆற்றியகொடுமை*
*கொலனி ஆட்சியின் கொள்ளையடிப்பு*
*மரபைப் பேண வகுத்த தடைகள்*
*மொழியைப் பேச விதித்த தண்டம்*
*மதத்தை மாற்றப் புனைந்த சதிகள்*
*பழங்கதை என்றா மறந்து போனோம்?*
*பேரினவாதம் இழைத்த இன்னல்*
*இந்திய நண்பர் இயற்றிய வஞ்சனை*
*எல்லாம் முடிந்தன என்றா மறந்தோம்?*
*இல்லை இல்லை உண்மை ஏதெனில்*
*நாமே நமக்குப் பகையென ஆனோம்.*
*நம்மை நாமே அழித்திட உறுதி*
*பூண்டனம். அதனால்*
*எம்மூர் தவிர்ந்த யாதும் ஊரே*
*எம்மவர் தவிர்ந்த யாவருங் கேளிர்*
*தீதும் அழிவும் பிறர்தர வேண்டா.*

*சிவா*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அந்த நாள் வரவேண்டும்!

ஏறத்தாழப் பத்தாண்டு காலமாகத் தொடர்ந்துவரும் எமது ஈழ விடுதலைப் போர் இன்று மேலும் நெருக்கடிகளிற்கு உள்ளாகி வருகிறது.

'இலகுவாக ஈழம் ஒன்றைப் பெற்றுக் கொள்ளும்' கனவு இன்று கலைந்து வருகிறது. எமது அரசியல் வேலைமுறைகளிலிருந்துவரும் தவறுகள் அனைத்தும் மேலும் அம்பலமாகி வருகின்றன. ஈழமக்களின் விடுதலைக்கு எமது இளைஞரின் யுத்த, தந்திர முறைமைகளை மட்டும் நம்பியிருந்த நிலைமையும் நன்கு அருகி வருகிறது. அனைத்து மக்களது பங்களிப்பினையும் தவிர்க்க முடியாமையாக்கும்- அறிவு பூர்வமான அரசியலொன்றின் தேவையை உணர்த்தும் நல்லதொரு அறிகுறிகளே இவை.

இவைகளுடன் பல எமக்குத் துன்பந் தருவனவாகியுமுள்ளன. அடக்கு முறைகள் இன்று மேலும் பல வடிவங்களில் அதிகரித்துள்ளது. இதுவரைகால ஈழவிடுதலைப் போர் விளைத்த அனர்த்தங்களும், தொடர்ந்து வரும் இலங்கை அரசுப் படைகளின் அட்டூழியங்களும் எமது மக்களுக்குத் தாங்கொணாச் சுமையளித்துள்ளன. எந்தவொரு உயிர்களுக்கும் உத்தரவாதமில்லா நிலைமையொன்றும் முன்னரெப்போதையும் விட இன்று அச்சம் தரும் வகையில் அதிகரித்து வருகிறது. அத்துடன் எமது இயக்கத் தலைமைகளின் தான்தோன்றித் தனமான போக்கும், தீவிரமும் - தீர்க்க தரிசனமற்ற அரசியலும் எமக்கு வேதனையைத் தருகின்றன. இவைகளுடன், எமது ஈழவிடுதலையின் பேரில், உயிர்களும், உடமைகளுமாய் மேலும் மேலும் இழப்புக்களே அதிகமாகி வருகின்றன.

இச் சூழ்நிலைகளில் கடல்கடந்து வாழுகின்ற எமது தேசபக்த சக்திகளின் பங்களிப்பு, இன்று எங்கே? தினமும் அச்சம் அவலமுடன் வாழும் எமது மக்களுக்கு இங்கு 'சுதந்திரமான காற்றொன்றைச் சுவாசிக்கின்ற' நாம் கூறும் செய்திதான் என்ன?

இக் குழப்பமான நெருக்கடி நிலைமைகளே பனிமலரின் முதல் இதழினை இன்று சாத்தியமாக்கியுள்ளன. நீண்டகாலமாகவே லண்டனில் உணரப்பட்டு வந்ததொன்றிது. சகல தமிழ் வேலைமுறைகளும் சோர்வடைந்துள்ளதொரு சூழலில் இதன் தேவையொன்று முன்னரெப்போதையும்விட இன்று வெகு முனைப்பாகியே யுள்ளது.

ஈழத்தின் 'கையறுநிலை' கடல்கடந்த நாடுகளில் பல தரமான தமிழ்ச் சஞ்சிகைகளை இன்று வெளிக் கொணர்ந்துள்ளது. தனி நபர்களாலும், குழுக்களாலும் - ஏறத்தாழ இருபத்தைந்துக்கும் அதிகமானவை ஐரோப்பிய நாடுகளிலிருந்து மட்டும் வெளிவருகின்றன. இவைகளுள் பல தமிழில் புதிய முயற்சிகளாயுமுள்ளன. கருத்துச் சுதந்திரத்திற்குத் தமிழில் கதவடைக்கப்பட்டுள்ள தொரு நிலையில் இவைகளே சரியான பல கருத்துகளிற்குக் களங்களாகியுமுள்ளன. இவைகளுடனேயே பனிமலரும் இன்று மலர்ந்துள்ளது.

'உள்ளிலும் வெளியிலும்' ஒடுக்குதலிற் குள்ளாகியிருக்கும் எமது மக்களின் பூரண விடுதலைக்கு தம்மை அர்ப்பணித்துச் சேவைசெய்ய விரும்பும் சகல தேசபக்த சக்திகளுடனும் இணைந்து பனிமலரும் தனது பங்கினை ஆற்ற விரும்புகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எமது மக்களை அடிமைப் படுத்தியுள்ள அதிகாரத்துவம் அனைத்தும் அகன்று, சகலரும் உணவுக்கும் உயிர் வாழ்வதற்குமான உத்தரவாதம் பெற்று, சாதிமத பேதங்கள், பெண்ணடிமை நீங்கி, மூட நம்பிக்கைகள் அனைத்தும் உடைந்து, வறுமையும் துயரமும் நிரந்தரமாகிவிட்ட எமது மக்கள் அனைவரும் விடுதலைபெறும் அந்த நாளை அடைய பனிமலரும் தனது தளத்தில் நின்று உழைக்கும்.

அந்த நாள் வெகு விரைவில் வந்துவிட வேண்டுமென்பதே பனிமலரின் அவாவுமாகும்.

*   *   *

இது பனிமலரின் முதலாவது இதழ்.

கலைஇலக்கியம், அரசியல், அறிவு, மற்றும் விமர்சனம் உள்ளிட்டு - கலாச்சாரத் துறையில் புதியன படைக்கப் புறப்பட்டுள்ள, எமது, 'தமிழ் மக்கள் புதிய கலாச்சாரக் குழுவினரின்' முதல் இதழ் இது.

எமது அக்கறைகள் அனைத்தையும் நிர்ணயிப்பதற்கு இவ் இதழ் முழுமையாக இல்லை. அத்துடன் சில பழைய பிரசுரங்களும் மறு பிரசுரமாகியுள்ளன. காலமும், நேரமும் - தேவையும் கருதி இவைகள் எமக்குத் தவிர்க்க முடியாததாகியுள்ளன.

அடுத்த இதழ் முதல் பனிமலர் ஒழுங்காகவிருக்கும் என்பதும் உறுதியாகச் சொல்வதற்கில்லை. சிறிய பத்திரிகைகளின் வருகையில் உள்ள சிரமங்கள் புதியவையல்ல.

ஆண்டொன்றிற்கு ஆறு பனிமலர் இதழ்களே தற்போது எமக்குச் சாத்தியமாகப் படுகிறது. இயலுமான வரையில் இதனைக் 'கனமாக்க' முயற்சிப்போம்.

நாம் எமது மக்கள் அனைவருக்கும் பொறுப்பானவர்களாக இருக்க விரும்புகிறோம். இந்த எண்ணத்தைச் செயற் படுத்தும் பொறுப்பு உங்களுடையதுந்தான்.

எங்கள் பங்களிப்பினைப் பெறுமதியானதாக்குவதும் உங்கள் கரங்களிலேயே உள்ளது.

எழுதுங்கள் நண்பர்களே!

*   *   *

இன்று, மீண்டும் எமது மக்கள் மீது அடக்குமுறை யுத்தம் ஒன்று அவிழ்த்து விடப்பட்டுள்ளது. இலங்கை அரசுக்கும் ஈழவிடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை முறிவடைந்து, இந்த யுத்தம் தொடங்கி முதல் இரண்டு வாரங்களுள் மட்டுமே மூவாயிரத்திற்கும் அதிகமான அப்பாவி மக்களைக் காவு கொண்டிருந்தது. இலங்கை அரசு கைப்பற்றியிருந்த கிழக்கு மாகாணத்திலேயே பெருமளவு பேர்கள் கொலையுண்டுள்ளனர். இவர்களுடன் இது வரையில் பெருவாரியான பொதுமக்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதாகிப் பின்னர் 'காணாமற்போன' பலரது சடலங்கள் தெருக்களில் வீசுண்டிருந்ததாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன.

தற்போது இலங்கை அரசின் கைப்பற்றுகை யிலிருந்து தப்பியிருக்கும் வடபகுதிகளிலும் நிலைமைகள் மோசமாகவே உள்ளன. முகாம்களைச் சுற்றியுள்ள பல வீடு, கட்டிடங்கள் 'செல்' அடித்துச் சிதைக்கப் பட்டுள்ளன. சில பாடசாலைகளும், பல பெரிய கட்டிடப் பகுதிகளும் எரியுண்டு சேதமாகியுள்ளன. எமது மக்களின் ஈனக்குரல் கூடக் கேட்காத வகையில் பரந்தனுக்கு அப்பால் உள்ள பகுதிகள் அனைத்தும் முற்றாகத் துண்டாடி விடப்பட்டுள்ளன.

இப் போர்ச் சூழலினால் பல்லாயிரக் கணக்கான மக்கள் பாடசாலைகளிலும் , கோயில்களிலும் அடைக்கல மாகியுள்ளனர். ஏறத்தாழ முப்பதினாயிரத்திற்கும் அதிகமானோர் இந்தியாவில் அகதிகளாகி யிருக்கின்றனர். இவற்றுடன் பல தமிழ்ப் பகுதிகளில் பஞ்ச நிலவரமும் தோன்றியுள்ளது.

தென்னிலங்கையிலும் எமது மக்கள் எவரும் இயங்கமுடியா சூழல் ஒன்றே இன்று உருவாகியுள்ளது. எவ்வித காரணமுமின்றி ஏறத்தாழ இரண்டாயிரத்து ஐநூறுக்கும் அதிகமான அப்பாவித் தமிழ் இளைஞரைக் கைது செய்து இலங்கை அரசு சிறையிலடைத்துள்ளது. சிங்களப் பகுதிகளில் தமிழர் கொலையுண்டுள்ளதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன. இவைகளுடன், ஏறத்தாழ ஐநூறுக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதிகமான தமிழ்பேசும் முஸ்லிம் மக்களும் சிங்களப் பொதுமக்கள் சிலரும் கொலையுண்ட செய்திகளையடுத்து தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களிடையே கலவர சூழ்நிலையொன்றும் தோன்றியுள்ளது.

இலங்கை இராணுவத்திற்கும், ஈழவிடுதலைப் புலிகளின் ஆதரவாள ரொருவரிற்கும் இடையிலான பிணக்கு ஒன்றினை அடுத்தே இத்தனை அட்டூழியங்களும் ஆரம்பமாகியுள்ளன. எமது மக்கள் மீது எவ்வித பொறுப்புமற்ற, வெறும் ஆத்திரத்தையூட்டும் வெறித்தனமான செயல்களையே இன்று இந்த யுத்தம் விளைவாக்கி வருகிறது.

இன்று மேலும் எமது விடுதலைக்கு எதிரான நிலைமைகளையே இன்றைய யுத்தம் உருவாக்கி உள்ளது. இலங்கை அரசினது நிலை உறுதியாகி, இனவாத சக்திகளின் கரங்கள் மேலும் ஓங்கி வருகின்றன. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையினை அங்கீகரித்திருந்த சில தென்னிலங்கை இடதுசாரி சக்திகள் கூட இன்று வரையில் இந்த யுத்தத்தினை ஆதரித்தே வந்துள்ளன.'83ன் இனப் படுகொலைகளின் பின்னர் இனவாத இலங்கை அரசிற்கெதிராகத் திரண்டெழுந்த தமிழக மக்களும் இன்று வாய்மூடி மௌனமாகவே உள்ளனர். இவைகளுடன் இந்திய அரசு மீண்டுமொருமுறை ஈழத்தில் கால் பதிக்கவும் இன்றைய யுத்த நிலைமைகள் வழிகோலி வருகின்றன.

ஒடுக்குதலிற் குள்ளாகியிருக்கும் எமது மக்கள் அனைவரதும் விடுதலையானது ஆயுதப் போராட்டம் ஒன்றின் மூலமே சாத்தியமானது என்பதில் இன்று எவருக்கும் கருத்து பேதமிருக்க முடியாது. பெருமளவில் எமது மக்களை அழித்துவரும் பேரினவாத அரசுகூட ஆயுதப் போராட்ட மொன்றினையே நடத்துகின்றதென்பதும், ஆயுதப் போராட்டமானது பரந்துபட்ட எமது மக்களின் விமோசனத்திற்கானதாக உள்ளபோது மட்டுமே அது ஆக்கபூர்வமானதாகும் என்பதும் நன்கு உணரப்படல் வேண்டும்.

அநாவசியமான உயிர் இழப்புக்களைத் தவிர்த்து, அறிவுபூர்வமான அரசியலுடன்-'அனைவரையும்' இணைத்து, கசப்பான கடந்தகால படிப்பினைகளூடாக, சாதகமான தேசிய-சர்வதேசிய சூழலில் ஒடுக்குதலிற் குள்ளாகியிருக்கும் சகல மக்களதும் பங்களிப்புடனேயே எமது விடுதலைப் போராட்டம் தொடரப்படல் வேண்டும்.

இவைகள் எவற்றினையும் கவனத்திலெடுத்திராத இன்றைய யுத்தம் எந்த வகையிலேனும் நிறுத்தப் படவேண்டுமென்பதே இன்று சரியானதாகும்.

- 28.07.90

தென்னிலங்கையில் அகதிகளாயுள்ள ஏறத்தாழ இருநூறு தமிழ் மக்கள் கையொப்பமிட்டு சகல கட்சித் தலைமைகட்கும் அனுப்பிவைத்துள்ள மகஜரொன்று பனிமலரிற்குக் கிடைத்துள்ளது. எமது மக்கள் மேலும் பங்காளராக மாறும் வெகுஜன வேலைமுறைகள் எமது விடுதலைப் பயணத்தில் ஆக்கபூர்வமான அம்சங்களாகும். அம் மகஜர் இங்கு முழுமையாக அப்படியே பிரசுரமாகிறது.

கட்சித் தலைமைகட்கு:

## அல்லலுறும் மக்களிடம் இருந்து ஓர் வேண்டுகோள்.

இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களாகிய எம்மீது இன்று கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இவ் யுத்தமானது எவ்வகையிலும் நியாயப்படுத்தப் படமுடியாத தொன்றாகும். இன்று நடைபெறும் இக் கொடிய யுத்தத்தில் இடைநடுவே சிக்குண்டு அல்லல்படும் பொதுமக்களாகிய நாங்கள், எமது சார்பில் குரல் கொடுக்க எவரும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அற்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பது மிக வேதனைப்பட வேண்டியதொன்றாகும். எனவே வடக்கு கிழக்கு வாழ் மக்களின் பிரதிநிதிகளாகக் கருதப்படும் அரசியற் கட்சிகளாகிய உங்களிடம் இவ் வேண்டுகோளை விடுக்கிறோம்.

வடகிழக்கில் இன்று நடைபெறும் யுத்தமானது எப் பகுதியினரால் ஆரம்பிக்கப்பட்டிருப்பினும் இன்று அதனால் பாதிக்கப் பட்டிருப்பவர்கள் வடகிழக்கு வாழ் பொதுமக்களாகிய நாங்களேயாகும். யுத்தத்தின்போது இடையில் சிக்குண்டு உயிர்களை இழந்தது மட்டுமன்றி, இலட்சக் கணக்கில் அகதிகளாகவும், இளைஞர்கள் கைதிகளாகவும் வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். இதில் வடக்கு கிழக்கு வாழ் தமிழ், சிங்கள, முஸ்லிம் அனைத்து மக்களும் அடங்குகின்றனர். அனைத்தையும் இழந்து அகதிமுகாம்களில் இருந்தும்கூட அங்கும் எமது உயிருக்கு உத்தரவாதமற்ற நிலையே இன்று தோன்றியுள்ளது.

இந்த யுத்தமானது இன்று சடுதியாக ஆரம்பிக்கப் பட்டதொன்றாகத் தென்பட்டாலும் இதன் பின்னணியானது கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலான எமது அரசியல் போராட்டத்துடன் பின்னிப் பிணைந்துள்ளது என்பதை யாவரும் புரிந்து கொள்ளவேண்டும். இன்றும் எமது பிரச்சினைகள் முழுமையாக தீர்க்கப்படாத நிலையே காணப்படுவதனால், இந்த யுத்தமானது தற்போதைக்கு முடிவுக்கு வரக்கூடியதல்ல என்பதையும் நாம் உணரவேண்டும். எனவே தொடர்ந்தும் நாம் அகதிகளாக்கப் படுவதும், எமது உயிர் உடைமைகளுக்கு சேதம் விளைவதும் தொடரப் போகின்றது என்பதையும் அனைவரும் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

எனவே இவ் இக்கட்டான கட்டத்தில் தமிழ்பேசும் மக்களின் பிரதிநிதிகள் என்றவகையில் ஜனநாயக அரசியல் வழிமுறைக்கூடாக எமது பிரச்சினைக்குத் தீர்வுகாண நம்பிக்கை கொண்டுள்ள அரசியல் கட்சிகளான உங்களிடம் நாம் பின்வரும் வேண்டுகோளை விடுக்கிறோம்.

(1). இன்று வடகிழக்கில் நடைபெறும் யுத்தத்தால் மக்கள் அதிகமாகப் பாதிக்கப் படுவதை முன் கருத்திற்கொண்டு உடனடியானதொரு யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தி, அனைத்து தமிழ்க் கட்சிகளும் பேச்சுவார்த்தைக்கு வரக்கூடியதான சூழ்நிலையை உருவாக்க நடவடிக்கை எடுக்கவும்.

(2). யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பகுதிகளிலும் இலங்கை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டினுள் இருப்பதாகக் கூறப்படும் பகுதிகளிலும் பொதுமக்களின் உயிர் உடைமைகளின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் செய்ய நடவடிக்கை எடுக்கவும்.

(3). வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் தங்கியிருக்கும் தமிழ்பேசும் மக்களின் உயிர் உடைமைகளுக்கான பாதுகாப்பினை உத்தரவாதம் செய்ய நடவடிக்கை எடுக்கவும்.

(4). பாதிக்கப்பட்ட பகுதிகளில் அகதிகளான மக்களுக்கு எந்தவிதமான பாரபட்சமற்ற முறையில் அத்தியாவசியப் பொருட்களை உரிய நேரத்தில் கிடைப்பதற்கான ஒழுங்குகளை செய்ய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

நாம் மேற் குறிப்பிட்டுள்ளவைகள் எமது பிரச்சினைகளை முழுமையாக தீர்த்துவிடாது என்பதை நாம் உணர்ந்தாலும், இன்று உடனடியான எமது பிரச்சினைகளை தீர்க்கும் என நாம் நம்புகிறோம்.

எமது அரசியல் பிரச்சினை தொடர்பாக, இலங்கை அரசின் மீதோ, அவை நடத்திய பேச்சுக்கள் மீதோ, தமிழ்பேசும் மக்களின் பிரதிநிதிகள் என்பவர்கள் மீதோ நம்பிக்கைகளை இழந்துபோகும் நிலையில் இருந்தே இவ் வேண்டுகோளை விடுக்கிறோம்.

வெறும் பத்திரிகை அறிக்கைகள் மாத்திரம் எமது இன்றைய பிரச்சினையான உயிர் உடைமைகளுக்கான பாதுகாப்பை உத்தரவாதம் செய்ய போதுமானவையல்ல என்பதைக் கருத்திற்கொண்டு, உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தமிழ்பேசும் மக்கள் சார்பில் உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

2.7.1990.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# இனவாதமும் விடுதலையும்.

வினை விதைப்பவர்கள் என்றும் தினை அறுப்பதில்லை. வகுப்புவாத அரசியல் புரிபவர்கள் வகுப்புவாதத்தையே அறுவடை செய்யமுடியும்.

இதுவரைகால எமது தவறான அரசியல் வேலைமுறைகள் அனைத்தும் தென்னிலங்கை அரசுகளின் இனவெறி அரசியலை நீரூற்றி வளர்த்து தமிழ் - சிங்கள மக்களிடையில் வகுப்புவாதத்தினையே விதைத்து வந்தது. தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை வைத்துப் பிழைப்பு நடாத்தித் தமிழ்-சிங்கள தலைமைகள் தங்கி நிற்கவே இரு பகுதிகளிலும் இது உதவி புரிந்தது.

இத் தவறான தமிழ்-சிங்கள வேலைமுறைகளே இலங்கை மக்கள் மீது பரஸ்பரம் பகைமையுணர்வையும் வளர்த்து வந்தது. தமிழ் மக்களது நியாயமான பிரச்சினைகள் பற்றிச் சிங்கள மக்கள் புரிந்து கொள்ளவும் இவ் வேலைமுறைகள் தொடர்ச்சியாகத் தடுத்தன. சிங்கள-தமிழ்த் தலைவர்கள் இடையிடையே செய்துகொண்ட இரகசிய ஒப்பந்தங்களும், போலிப் பேச்சு வார்த்தைகளும்கூட இத் தலைவர்களின் சொந்தக் 'கணக்கு-வழக்குகளை'த் தீர்த்து, இவர்களின் தலைமைகளைத் தங்கவைக்க உதவியதேயன்றி தமிழ்-சிங்கள மக்களின் நலன்களைப் பிரதிபலிக்க வில்லை. தென்னிலங்கை மக்கள் இலங்கை அரசுக் கெதிராகக் குரலெழுப்பிய பொழுதுகளில் எமது தமிழ்த் தலைவர்கள் இப் பேரினவாத அரசுகட்குச் சாதகமாகச் செயலாற்றி எம்மீது சிங்கள மக்களிடத்தில் மேலும் வெறுப்புணர்வையே வளர்த்தனர்.

தமிழ்-சிங்கள மக்களிடையில் வளர்த்த இனவெறியே பயங்கரவாதத்திற்கு வித்திட்டது. பயங்கரவாதத்திற்கு ஜனநாயகத் தன்மையில்லை. அது மனிதப் பண்புகளிற்கு என்றும் மதிப்பளிப்பதில்லை. பயங்கரவாதமே தலைமைகளைப் பாசிசத் தன்மையதாக்குவது. இதுவரைகால 'ஈழ விடுதலைப் போரில்' சில சிங்கள-தமிழ்த் தலைமைகளின் உயிர்களுட்பட ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களின் உயிர்களையும் இப் பயங்கரவாதமே பறித்து வந்துள்ளது. சிங்கள அரசுப் பயங்கர வாதமும், தமிழ்ப் பயங்கர வாதமும், சிங்கள-தமிழ்த் தலைமைகளை ஒன்றையொன்று வளர்க்க உதவியதேயன்றி எமது மக்களின் பிரச்சினைகளுக்கு எந்தளவிலேனும் தீர்வாகவில்லை.




அண்மைக்காலங்களில் தமிழ்மக்களின் நன்மதிப்பைப் பெற்றிருந்த பிரேமதாசாவின் இலங்கை அரசு கடந்த வருடம் ஆயிரக்கணக்கான அப்பாவிச் சிங்கள மக்களைக் கொன்று குவித்திருந்தது. உத்தியோகப்பற்றற்ற செய்திகள் இத் தொகையினை ஏறத்தாழ ஐம்பதினாயிரத்திற்கும் அதிகமானவையெனக் கூறுகின்றன. லண்டனில் வெளிவரும் Economist சஞ்சிகையில் பிரசுரமான மேற்படி வரைபடம், இத் தொகையினை இலங்கைச் சனத்தொகையில் 0.1% எனக் கணிப்பிடுகிறது. எண்பதுகளின் ஆரம்பத்தில் எல் சல்வடோரில் கொலையுண்டோரின் எண்ணிக்கையை அடுத்து இதுவே உலகில் அதிகமானது.

இலங்கை அரசுக்கும் ஈழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சு வார்த்தை முறிவடைந்து இன்று தோன்றியுள்ள யுத்தமும் இவ் விளைவுகளையே மீண்டும் பிறப்பாக்கி வருகிறது. ஐம்பதினாயிரத்துக்கும் அதிகமான அப்பாவி மக்களைக் கொலை செய்து பரந்துபட்ட சிங்கள மக்களிடத்தில் பெரும் அபகீர்த்தி பெற்றிருந்த இலங்கை அரசின் தலைவன் பிரேமதாசா இன்று ஒரு தேசபக்த தலைவனாக உருவாகி வருகிறான். தெற்கிலுள்ள அரசியற் கட்சிகளும், தென்னிலங்கைப் பத்திரிகைகள் அனைத்தும், இலங்கை அரசிற்கு இதுவரை எப்போதுமில்லாத வகையில் இன்று தங்கள் ஆதரவை வழங்கியுள்ளன.

பிரேமதாசாவின் பாதுகாப்பு நிதிக்கு மீண்டும் பணச் சேர்ப்பு நடைபெறத் தொடங்கியுள்ளது. 'தேசத்தைப் பாதுகாக்க'வெனச் சிங்கள இளைஞர்கள் பெருமளவில் திரட்டப்பட்டு வருகின்றனர். வடக்கு-கிழக்கில் போர்புரியப் போகும் இலங்கை ராணுவ வீரர்கள் அனைவரும் சிங்கங்களாக வர்ணிக்கப்பட்டே செய்திகள் வெளிவிடப் படுகின்றன.

தெற்கிலுள்ள இனவாத அரசியல் நிலைமைகள் வடக்கு கிழக்கிலும் அத் தன்மைகளை விளைவாக்கி வந்ததே எமது வரலாறு. ஈழ விடுதலைப் போராட்டம் இனப் போரொன்றாக மாறிவரும் அபாய நிலைமைகள் இரண்டு தலைமைகளிற்கும் மட்டுமே சாதகமானவை.

சிறுபான்மை இனமொன்று, பெரும்பான்மை இனமொன்றைத் தன் போர்ப்பலத்தின் துணைகொண்டு மட்டும் விடுதலை பெற்றதாக வரலாறே இல்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*இலங்கையிலிருந்து*

# வழிப்போக்கன் டயறி: பாகம் 3: கையறு நிலை.

*முன்குறிப்பு:*

*கனம் வாசகர்களே, வணக்கம்! முழுக்க முழுக்க வெளிநாட்டில் வாழும் உங்களுக்காக நடத்தப்படும் இந்தப் பத்திரிகையில் பாகம் 3ஐ எழுதத் தொடங்குவது ஒரு வகையில் தவிர்க்க முடியாததாகும். பாகம் ஒன்றும், பாகம் இரண்டும் எழுதிய பின்னர்தான் பாகம் மூன்றை எழுதவேண்டும் என்பது ஒரு மரபு என நினைத்து உங்களில் யாராவது என்னிடம் கேள்வி எழுப்பக்கூடும். தயவுசெய்து மன்னிக்க வேண்டும். இந்த மாதிரி மரபுகளையெல்லாம் எப்போதோ விட்டுவிட்டதால்தான் வெறும் 'வழிப்போக்கனாகி விட்டுள்ள' ஒருவன் என்ற முறையில் வேறெதுவும் சரியென எனக்குப் படவில்லை. பாகம் ஒன்று எழுதவேண்டிய காலத்தில் நேரமில்லாமல் இருந்ததும், பாகம் இரண்டு எழுதவேண்டிய நேரத்தில் அவனிடமிருந்து பேனா பிடுங்கப் பட்டிருந்ததும் முக்கியமான விசயங்களல்ல. ஒரு வகை மரபுமீறலே.....*

*வேண்டாம், விசயத்துக்கு வருவோம்.*

யூன், 90.

மட்டக்களப்பில் சண்டையாம். அன்றைக்கு பத்தாம் திகதி சண்டையொன்று வவுனியா நெடுங்கேணியில் தொடங்கியபோதே இது தொடரும் என்று யோசித்தேன். ஆனால் எப்படியோ அமைச்சர் ஹமீது விழுந்தடித்துக் கொண்டு யாழ்ப்பாணம் போய் அதைச் சமாளித்து விட்டார். இப்போது மட்டக்களப்பில் தொடங்கியிருக்கிறது. தொடக்கம் நல்ல இடி முழக்கத்துடன்தான் கொடியேறியது - சன்னதி கொடியேறியதுபோல. படபடவென்று அம்பாறை, கல்முனை, பொத்துவில் பக்கமெல்லாமிருந்த பொலிஸ் நிலையங்களையும் இவங்கள் பிடிச்சிட்டாங்கள். யாழ்ப்பாணம், பருத்தித்துறை, மன்னார், வவுனியா, திருகோணமலையும் பிடிச்சாச்சென்று பேசப்படுகிறது.

சந்தோசமாக இருக்கிறதா இல்லையா என்பது புரியவில்லை. தமிழனாய்ப் பிறந்தவன் சந்தோசப் படவேண்டிய சமாச்சாரம்தான். ஆனால் எனக்கு ஏன் இப்படி புத்தி போறதோ தெரியவில்லை. உண்மையாக இப்ப இவங்கள் சண்டை தொடங்கினதுக்கு என்ன காரணம் என்றும் விளங்கவில்லை. இலங்கை அரசாங்கத்தோடு கடந்த பதின்மூன்று மாதமாகப் பேசிக்கொண்டிருந்த அவையள் திடீரென சண்டைப்பட வெளிக்கிடறதுக்கு என்ன காரணமாக இருக்கும்? இலங்கை அரசாங்கம் சுத்துமாத்து விடக்கூடிய அரசாங்கம் என்பது எல்லாருக்கும் தெரிந்த விசயம்தான். ஆனால் இந்தப் பதின்மூன்று மாதங்களாக அவர்கள் அப்பிடிப்பட்டவர்கள் இல்லை, நேர்மையானவர்கள் என்றுதானே இவங்கள் சொல்லிக்கொண்டு வந்தவங்கள் - எங்கட பெடியள்... இப்ப ஏன் திடீரென்று? ஆனால் என்னதான் இலங்கை அரசாங்கத்தோட சண்டைபிடிக்காமலே தமிழன்ர எல்லாப் பிரச்சனையையும் தீர்த்துப் போடலாம் என்று யாராவது நினைத்தால் அது தப்பு. அது சாத்தியமில்லை என்பதுதான் என்ரை பணிவான அபிப்பிராயம். அதுக்காண்டி நேரகாலம் தெரியாமல் சண்டைபிடிக்க முடியுமா என்ன? விசர்ப் பெடியள் மோட்டுவாக்கில தொடங்கியிட்டாங்கள்.

* * *

எல்லாம் சரியாப் போச்சு. பிடிச்ச இடமெல்லாம் திரும்ப அவங்கள் பறிச்சுப் போட்டாங்கள்; மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா எல்லாம். யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியும் இயங்கேல்லையாம். முல்லைத்தீவு, வவுனியா ஆஸ்பத்திரிகளும் இயங்கேல்லையாம். இவங்கட வீண்வேலை. இப்ப ஒருதரும் தமிழனுக்காண்டி கதைக்க வாறாங்களில்லை. எல்லாம் தேவையில்லாமல் சண்டைபிடிக்கப் போனதாலை இவைக்கு உது வேணும் எண்டு நினைக்கிறாங்கள் போலை. அரசாங்கத்தோட பேசேக்கையே சண்டைக்கு இவங்கள் றெடியாகிக் கொண்டிருந்தாங்கள் தான். ஆனால் சும்மா ஆயுதத்தைச் சேர்த்தால் போதுமோ? அவனை சண்டைக்கு இழுக்கிறதுக்கு நியாயம் வேண்டாமோ? அப்பெல்லாம் ஒரு செல் விழுந்தாலே உலகம் முழுதும் இலங்கை அரசாங்கத்தைத் திட்டுறதைக் கண்டம். இப்ப... ஒரு நாதியுமில்லாமல் போச்சு. தமிழன்ரை இடத்தில சண்டை துவங்கி பத்து நாள்கூட ஆகேல்லை, மூண்டுலட்சம் பேர் அகதியளாம்! இந்தச் சனங்கள் எக்கணம் இதுகளைத் திட்டவெல்லே போகுது.

* * *

யூலை, 90.

எண்டாலும் கொக்காவில் அடி அடிதான். அதோட சனம் பயந்துதான் போட்டுது. இராணுவத் தீர்வே ஒரே வழி எண்டு சொன்ன 'அம்மா'கூட அரசியல் தீர்வு எண்டு சமாளிச்சிட்டா. கொழும்பு இங்கிலீசுப் பேப்பர்கள்கூட தடுமாறுது.. பாப்பம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

* * *

இப்போது யோசிக்கையில் எல்லாம் புரிகிறமாதிரி இருக்கிறது. இலங்கை அரசு கடந்தகாலம் முழுவதும் தன்னை நன்றாகவே அரசியல் செல்வாக்கில்உயர்த்திக் கொண்டு விட்டது. புத்தளத்தில் ஜனாதிபதி பேசினது உண்மைதான். பேச்சுவார்த்தை இலங்கை அரசுக்கு (1) பொருளாதார ரீதியாக (2) இராணுவ ரீதியாக (3) உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சனநாயகத்தன்மை வாய்ந்ததாக நிறுவுவதில் (4) புலிகளை மக்கள்முன் அம்பலப் படுத்த (5) இலங்கைப் பட்டாளத்தை சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெறச்செய்ய - பழைய ரயர் எரிப்பை மறக்கச் செய்து கோடிகோடியாய் பாதுகாப்பு நிதி சேர்க்க... இப்படி எல்லாவற்றிற்கும் உதவியிருக்கிறது. இரகசியமாக மாகாணசபை அதிகாரத்தைக் குறைக்க, வடக்கு-கிழக்கைப் பிரிக்க, தமிழர் பிரச்சினையை உடைப்பில்போட உதவியிருக்கிறது - போதாதா அவனுக்கு?

* * *

அப்ப இவங்கள் என்ன செய்தவங்கள்? என்ன பேசினவங்கள்? அதையாவது சொன்னாலாவது ஓரளவு இந்த அரசாங்கத்தின்ர சேட்டை விளங்கும். அதையும் சொல்லாமல் வாயை மூடிக்கொண்டு, சட்டால் மட்டும் போதுமே. இந்தச் சண்டையுக்கை எல்லாருக்கும் எல்லாம் மறந்திட்டுது.

தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை எண்டு ஏதோ கதைச்சினமே, அதுக்கு என்ன நடந்தது எண்டும் தெரியேல்லை! (தொடரும்).

## விளையாட்டு

*அழப்பிக் குழப்பி*
*முதலிலிருந்து தொடங்குவோம்*
*அழப்பி அழப்பியே*
*விளையாட்டின் விதிகளைக்*
*குழப்பி விட்டோம்.*
*வெற்றி எங்களுக்குக்*
*கிடைக்கும் வரை*
*குழப்பிக் குழப்பியே*
*விளையாடுவோம்.*

—நெடுந்தீவு மகேஸ்

# நடுத்தர வர்க்கத்தின் நழுவல்

*லூ சுன்*
*(சீனப் புரட்சிகர முன்னோடி)*

கனவு, பள்ளிப் பருவக் கனவு.
ஒரு ஆரம்பப் பள்ளிக்கூடம். வகுப்பறையில் உட்கார்ந்திருக்கிறேன்.
ஒரு கட்டுரை எழுத ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறேன். கட்டுரையில் எனது அபிப்பிராயத்தை எப்படி எழுதுவது என ஆசிரியரைக் கேட்டேன்.
"அது மிகக் கடினம்!...இரு, உனக்கு ஒரு கதை சொல்கிறேன்" - ஆசிரியர் மூக்குக் கண்ணாடிக்கு மேலாக ஓரப் பார்வை பார்த்தவாறு என்னிடம் கூறினார்.
"ஒரு குடும்பத்தில் ஆண் குழந்தை பிறந்தது. பெற்றோர் மிகவும் சந்தோஷமடைந்தனர். குழந்தைக்கு ஒரு மாதம் ஆனது. நல்ல வளர்ச்சி! வரும் விருந்தினர்களிடம் பெற்றோர் குழந்தையைக் காட்டினர். அவர்களது புகழுரைகளைக் கேட்க பெற்றோர் ஆசைப்படுவது இயல்புதானே!
"இக் குழந்தை செல்வச் சீமானாய் ஆவான்" என்றார் ஒருவர்.
அந்த உத்தமருக்கு பெற்றோர் நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்தனர்.
"இக் குழந்தை பெரிய அதிகாரியாவான்" என மற்றொருவர் புகழ்ந்தார். பெற்றோருக்கு ஒரே ஆனந்தம்!
அதிகாரியாக்கிய அவருக்கு புகழாரங்கள் சூட்டப்பட்டது.
"இக் குழந்தை மரணமடைவான்" என ஒருவன் சொன்னான். பெற்றோர் உள்ளம் கொதித்தது. அனைவரும் சேர்ந்து அவனை நையப்புடைத்து விட்டார்கள்!
"அந்தக் குழந்தை சீமானாய் வருவதும் பெரிய அதிகாரியாய் ஆவதும் நாளை பொய்யாகிப் போகலாம். ஆனால் அவன் இறப்பதென்னவோ உறுதி! எனினும் இங்கே பொய்யைச் சொன்னவனுக்குப் புகழாரம்! உண்மை பேசியவனுக்கு அடிஉதை! அப்ப... நீ வந்து..."
"அய்யா, நான் பொய் சொல்லவும் விரும்பவில்லை; உதைபடவும் விரும்பவில்லை - அப்படியானால் நான் என் கருத்தை எப்படி வெளியிடுவது?"
ஆசிரியர் சொன்னார், "அந்த மாதிரி நேரங்களில் நீ சொல்லவேண்டியதெல்லாம், இந்தக் குழந்தையைப் பாருங்களேன்! ஆகா! ஆகா! இவன் வந்து... ஓஹோ... ஓஹோ! குழந்தையைப் பற்றி என்னுடைய கருத்தா? ஹி... ஹி... ஹி... ஹி..."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ் பேசும் மக்களின் விடுதலைப் பாதையில் ஆழமாகச் சிந்திக்க வேண்டிய சில அம்சங்கள்.

எமது தமிழ் பேசும் மக்கள் இன்று என்றுமில்லாதவாறு மிகவும் இக்கட்டானதொரு காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பாசிச வழிமுறைகளைக் கையாளும் ஒரு பேரினவாத ஆட்சியின் கீழ் அவர்கள் உயிர்-உடமைகளை இழந்து மீண்டும் மீண்டும் திட்டமிட்ட இன அழிப்பு நடவடிக்கைகளிற்கு ஆளாகி வருகிறார்கள். இத்தகைய கொடூரம் மிக்க நிலையிலிருந்து தமிழ் மக்களிற்கு ஒரு விமோசனம் அவசியமாகிறது. அவ் விமோசனம் ஒரு விடுதலைப் போராட்டப் பாதையில் மட்டுமே சாத்தியமாகக் கூடிய தொன்றாகும். எனினும் எமது இதுவரைகால விடுதலைப் போராட்டப் பாதை எமது மக்களிற்கு எந்தவித விமோசனத்தையும் அளிக்கத் தவறியுள்ளதுடன், மேலும் மேலும் அழிவுகளையே பிறப்பாக்கி வருகிறது. இந் நிலைமையில், எமது மக்களிற்கு விமோசனம் அளிக்கக்கூடிய ஒரு விடுதலைப் போராட்டப் பாதை, எந்த அடிப்படையில், எவ்வாறான வழிமுறைகளில் முன்னெடுக்கப்படல் வேண்டும் என்பது ஆழமான சிந்தனைக் குரியதொரு அம்சமாகும்.

எமது தமிழ் மக்களின் விமோசனத்திற்கென இதுவரையில் முன்வைக்கப்பட்டு ஆட்சிபெற்றிருந்த கொள்கைகள், அக்கொள்கைகளை நடைமுறைப்படுத்தி தமது இலக்கை அடைவதற்கு மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகள் என்பனவற்றின் சாதக பாதக விளைவுகள் உண்மையான ஒரு பரிசீலனைக்கு உட்படுத்தப் படவேண்டும். எந்த ஒரு விடுதலை இயக்கமாயினும் தமது கொள்கை, நடைமுறை, வேலைத்திட்டம் என்பவற்றைக் குறைந்தது பத்தாண்டுகளுக்கு ஒரு முறையாவது மீள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வது அவசியம். அவ்வாருன பரிசீலனை முற்றிலும் மக்கள் நலன் சார்ந்த நிலையில் விமர்சனமாகவும், சுய விமர்சனமாகவும் அமைந்தால் அது தமிழ் மக்களின் விடுதலைப்பாதைக்கு புதியதோர் நிலையைத் தோற்றுவிக்க முடியும்.

ஒரு விடுதலைக்கான இயக்கத்தின் தொடக்கப் புள்ளி கொள்கையாகும். இக்கொள்கை நம் கண்முன்னே உள்ள யதார்த்த நிலைமைகளின் அடிப்படையில் வகுக்கப்பட வேண்டியவையாகும். இடம்பெற்ற சம்பவங்களின் உணர்ச்சிப்பெருக்கால் இக்கொள்கை வகுக்கப்படுவதற்குப் பதிலாக நாடு, நாட்டுமக்கள், பூகோள அரசியல் - பொருளாதார - கலாச்சார அம்சங்கள் மட்டுமன்றி தேசிய, சர்வதேசிய சூழ்நிலைகளில் ஏற்பட்டுள்ள மாறுதல்கள் போன்றனவும் இக்கொள்கை வகுப்பில் அடிப்படைக் கவனத்திற் குரியவையாகும். மேலும் இக்கொள்கை வகுக்கப்படும்போது கடந்த கால வரலாறு சரியான விதத்தில் விளங்கிக் கொள்ளப்படல் வேண்டும். கடந்த காலத்தைப்பற்றி அக்கறை எதுவுமின்றி, நிகழ்காலத்திற்கான சரியான கொள்கையை வகுக்க முடியாது. அவ்வாறானால் ஒரு நிட்சயமான எதிர்காலத்தை எவ்வாறு வென்றெடுக்க முடியும் என்பது பெரும் கேள்விக் குறியாகும்.

அதேவேளை இக்கொள்கைகள் எவ்வளவிற்கு மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டன? மக்கள் தமது அன்றாட வாழ்வில் இக் கொள்கைகளை ஒன்றாக இணைத்துக் கொண்டார்களா என்பவை பரிசீலனைக்கு எடுக்கப்பட வேண்டியவையாகும். ஒட்டுமொத்தமாக, மேலெழுந்த வாரியாக அல்லது ஒரு மானசீகமாக விஷயங்களை அணுகுவதற்குப் பதிலாக மக்களின் அடிமட்ட அபிலாஷைகளுடன் வகுக்கப்பட்ட கொள்கையாக அமைந்துள்ளதா என்று பரீட்சிப்பதும் நடைமுறைக்குத் தேவையாகும். எனவே இன்றைய நிலையில் தமிழ் மக்களின் விடுதலையை வென்றெடுக்கக்கூடிய சரியான கொள்கையை கடந்த கால கொள்கை வகுப்பின் படிப்பினைகளாலும் அதன் நிகழ்கால விளைவுகளின் அநுபவங்களாலும் மீள் பரிசீலனை செய்து உறுதிப் படுத்திக் கொள்வது அவசியமாகும்.

ஒரு சரியான கொள்கையை நடைமுறைப்படுத்தவும் அதன் இலக்கை அடையவும் பின்பற்றப்பட வேண்டிய பன்முக நடைமுறைகளும் முக்கியத்துவ முடையதாகும். இதில் ஒன்று ஸ்தாபனமாகும். எந்த மக்களின் விடுதலைக்கு எனக் கொள்கை வகுக்கப்பட்டதோ, அந்த மக்களின் அடிமட்ட வாழ்வுவரை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அக்கொள்கையை உரிய வழிகளில் எடுத்துச் செல்லக் கூடிய ஸ்தாபனப் பலத்தைத் தேடிக்கொள்வது அவசியமாகும். இதில் மக்களை ஒரு பொருட்டாக மதிக்காத, தங்களைவிட வீரர்கள் யாருமே இல்லை என்ற இறுமாப்பை உடைய, ஸ்தாபன அமைப்பு எதுவாக இருந்தாலும் அதனால் மக்கள் என்ற சமுத்திரத்தை அண்மிக்க முடியாது. மக்களை மனதார நேசித்து, வெறுமனே -கண்மூடித்தனமாக தமது இயக்கங்களுக் காகவன்றி மக்களின் விடுதலையை முன்னெடுத்துச் செல்வதற்காக தம்மை முற்று முழுதாக அர்ப்பணிக்கும் தன்மை கொண்டவர்களால் உருவாகக் கூடிய ஸ்தாபனத்தினால் மட்டுமே மக்களை அணுகி அவர்களை ஒரு போராட்டத்திற்கு அணி திரட்ட முடியும்.

கொள்கையும், ஸ்தாபனமும் சரியான வகையில் அமைக்கப்பட்டால் அதன் அடிப்படையில் போராட்டத் தந்திரோபாயங்களும் வகுக்கப்பட முடியும். கொள்கை ரீதியில் எதிரி யார்? நண்பன் யார்? என்று தீர்மானிக்கப்பட்டால் எதிரியைத் தனிமைப்படுத்தி தாக்கி அழித்தொழித்து முன்னேற நண்பர்களை தன்னுடன் ஐக்கியப்படுத்துவது ஒரு விடுதலைப்போராட்டத்தின் தந்திரோபாயங்களில் அடிப்படையான அரசியல் அம்சமாகும். இவ்வரசியல் அம்சம் ராணுவ ரீதியில் கூட எதிரிக்குப் பலவீனத்தையும் மக்களுக்கு பலத்தையும் ஏற்படுத்தக் கூடிய தொன்றாகும். இதன் நடைமுறைச் சாதக பாதக விளைவுகளை சமகால நடை முறைகளில் இருந்தும் படித்துக் கொள்ளமுடியும். போராட்டத் தந்திரோபாயங்கள் கூட எமது பூகோள, அரசியல், பொருளாதார, கலாச்சார அம்சங்களுக்கு இசைவானதாக உருவாக்கப்படல் வேண்டும். ஒன்று நடைமுறைப் படுத்தப்பட்டால் அதன் வெற்றி தோல்விகள் நிச்சயம் பரீசீலனைக்கு எடுக்கப் படல் வேண்டும். மக்களின் அபிப்பிராயங்களில் பயன் உள்ளவற்றை உள்வாங்கிக் கொள்வது அவசியம். எதிரிக்குக் கூடிய அழிவையும் மக்களுக்குக் குறைந்த சேதத்தையும் கொண்டுவரக்கூடிய போராட்ட முறைகள்தான் மக்களை உற்சாகப்படுத்தி ஒரு போராட்டத்தில் அவர்களையும் பங்கெடுக்க வைக்கும். அல்லது தாங்கிக்கொள்ள முடியாத துன்பத்தால் மக்கள் விரக்தியுற்றுள்ள தற்போதுள்ள நிலைமைகள் நிரந்தரமாவது தவிர்க்க முடியாத தாகிவிடும். அது போராட்டத்தின் பாதையில் தளர்வையும் பின்னடைவுகளையும் ஏற்படுத்திவிட்டுள்ள நிலையையும் கவனத்திற் கொள்வது அவசியம். ஒரு விடுதலைப் போராட்டத்திற்கென வகுக்கப்பட்ட கொள்கையாயினும், அதை அடைவதற்குரிய போர்த் தந்திரோபாயமாயினும் அவை நடைமுறை என்ற பரீட்சைக் களத்தில் மீண்டும் மீண்டும் அனுபவங்களைத் தொகுத்து மக்களுக்கும், போராட்டத்தின் முன்னேற்றத்திற்கும் பாதிப்புகளை - பின்னடைவுகளை தரக்கூடிய அம்சங்களைத் துணிந்து நிராகரித்து சரியானவற்றைப் பேணி வளர்த்து முன்னெடுக்க வேண்டும்.

தமிழ் மக்களின் விடுதலைப் பாதைக்கென கடந்த பத்து ஆண்டு காலத்திற்கு சற்று மேலாக முன் வைக்கப்பட்ட கொள்கையையும், அதைத்தொடர்ந்து நடைமுறைப் படுத்தப்பட்ட போராட்ட வழிமுறைகளும் மக்களுக்கும், விடுதலைப் போராளிகளுக்கும் பெரும் அழிவுகளையே ஏற்படுத்தி வருகின்றன. இவை ஈடு செய்ய முடியாத அளவில் பெரும் உயிர்ச் சேதத்தையும் பொருட் சேதத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றன. இக் கொள்கைகளும் போராட்ட வழிமுறைகளும் மக்களின் அபிப்பிராயங்களின் அடிப்படையில் பரிசீலனைக்கும், திருத்தங்களுக்கும், தேவை ஏற்படின் மாற்றி அமைத்தலுக்கும் உட்படுத்தப்பட வேண்டும். இவ்வாறு செய்ய முன்வராது விட்டால் மக்களை இன்றைய அபாயக்கட்டத்தில் இருந்து மீட்டெடுத்து, உண்மையான தமிழ் மக்களின் விடுதலையை வென்றெடுக்க முடியாது. பல ஸ்தாபனங்களுக்கும், பல சக்திகளுக்கும் பல் வேறு அபிப்பிராயங்களும் செயல் முறைகளும் இருக்கலாம். ஆனல் நாம் சொல்வது மட்டும்தான் சரியானது. எமக்கு மட்டும்தான் தமிழ் மக்களின் விடுதலையைக் கொண்டு நடாத்தத் தகுதியுண்டு என்ற பிடிவாத நிலையில் இருந்து விடுபட்டு, ஒவ்வொருவரும் தமது கருத்தைத் தெரிவிக்க ஜனநாயக ரீதியில் உரிமையளித்து, தமிழ் மக்களை ஒரு விமோசனப் பாதைக்கு இட்டுச் செல்லக் கூடியதும், சரியானதுமான பொதுக் கொள்கையும், அதை வென்றெடுக்கக் கூடிய போராட்ட வழி முறைகளும் வர பன்முக முயற்சிகள் செய்வதே இன்றைய தேவையாகும். இவற்றைச் செய்ய நாம் தவறினால், வெறும் கற்பனை எதிர்பார்ப்புகளை மட்டும் நம்பினால், தமிழ் மக்களுக்கு எதிரான அழிவுகளையும் அடக்கு முறைகளையும் தடுத்து நிறுத்தவும் ஒரு முழுமையான விமோசனப் பாதையில் முன்னேறவும் முடியாததாகிவிடும்.

---

## அமைதியின் அச்சுறுத்தல்.

உலகிலுள்ள பிரச்சனைகள் அத்தனைக்கும் வல்லரசுகள் ஒவ்வொன்றும் ஏதோவொரு வகையில் காரணமாய் இருந்திருக்கின்றன. அமெரிக்க, சோவியத் வல்லரசுகளிற் கிடையிலான உறவினைத் தொடர்ந்து உலகில் ஆயுதஉற்பத்தி பெரும் வீழ்ச்சியை அடைந்துள்ளது. அழிவுகளை மட்டும் பிறப்பாக்கி வந்த நீண்ட யுத்தங்கள் பல முடிவுக்கு வந்துள்ளன. மக்கள் யுத்தங்களை விரும்பவில்லை. யுத்தம் மக்கள் மீது திணிக்கப்படுகின்றது. மக்கள் அமைதியையே விரும்புகிறார்கள்.

எனினும் இவ் அமைதி சிலரிற்கு அச்சுறுத்தலாகியுமுள்ளது. Ha'aretz (14.12.89) என்னும் இஸ்ரேலியப் பத்திரிகையொன்றில் வந்த இஸ்ரேலியப் பாதுகாப்புத் தொழில் அதிகாரியின் நேர்காணலொன்று இதனைத் தெளிவாகத் தெரிவிக்கிறது. "இஸ்ரேலிய ஆயுத உற்பத்தியாளர்களும் ஏற்றுமதியாளர்களும் இன்று உலகில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் குறித்து அக்கறையாக உள்ளனர். உலகின் பல பிணக்குகள் இன்று முடிவுக்கு வருகின்றன. உலகில் இன்று பிரதான யுத்தங்கள் எதுவுமில்லை.நாம் இன்று அமைதியின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளோம்."

'வடக்கு கிழக்கு மாகாண சபையைக் கலைத்து, கிழக்கில் தனியான மாகாணசபை ஒன்றை நிறுவுவதற்கான முடிவை விரைவில் ஜனாதிபதி எடுப்பார்.'

பாதுகாப்பு இராசாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன பத்திரிகையாளர் மத்தியில் பேசும்போது மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையில் கடந்த மாதம் தொடங்கிய யுத்தத்தில், மூதூர் தவிர்ந்த கிழக்கின் ஏனைய பகுதிகளை பாதுகாப்புப் படையினர் கைப்பற்றியதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிக்களிப்பில் ரஞ்சன் விஜேரத்தின தெரிவித்த மேற்படி கருத்து, தமிழ் மக்களின் விடுதலையில் அக்கறையுள்ள எவரும் இலேசில் தட்டிக் கழித்துவிட முடியாத ஒன்றாகும்.

ஏனென்றால், கடந்த பதினான்கு மாதகாலமாக நடைபெற்ற அரசு, விடுதலைப் புலிகளின் பேச்சு வார்த்தையின் போது, திட்டமிட்டே அரசு போருக்கான ஒரு தயாரிப்பில் ஈடுபட்டு வந்திருக்கிறதா என்பதும் அத்தகைய யுத்தத்திற்கான சரியான ஒரு சந்தர்ப்பத்தை எதிர்நோக்கி இருந்ததா என்பதும், சர்வதேச, மற்றும் உள் நாட்டில் விடுதலைப் புலிகளை அரசியல் ரீதியாக தனிமைப் படுத்துவதில் தான் பெற்ற வெற்றியைச் சாதகமாக்கிக் கொண்டு தமிழ் மக்கள் மீது படு மோசமானதொரு தாக்குதலை அது தொடங்கி உள்ளதிலிருந்து எழுகின்ற கேள்விகளாக உள்ளன. இக் கேள்விகளுக்கு மேலும் வலுவூட்டுகிற விதத்தில், தமிழ் மக்கள் 1987 இந்திய ஒப்பந்தத்திற்கு முன்பும் சரி, பின்பும் சரி எதிர் கொண்ட யுத்தங்களில் இல்லாதளவு பெருமளவு துன்பங்களை தற்போது எதிர் நோக்கியுள்ளனர் என்ற அம்சம் பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது. போர் தொடங்கிய இருவார காலத்திற்குள்ளேயே மூன்று லட்சத்திற்கும் அதிகமானோர் அகதிகளானது, யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் அரசியல் வைத்தியசாலைகள் முற்றாக இயங்காமல் போனது , வடக்கு கிழக்குக்கான போக்குவரத்து தடைசெய்யப்பட்டது, அதிலும் வடக்குக்கான உணவு, எரிபொருள், மற்றும் பிற பொருட்களின் விநியோகத்தையும் பயணிகள் போக்குவரத்தையும் முற்றாக தடைசெய்தது என்பன மிகவும் முக்கியமாகக் கவனிக்கத்தக்கன. இந்த சம்பவங்களும், வடக்கில் தொடர்ந்து தாக்கிவரும் விமானப் படையினரின் பீப்பாக் குண்டுத் தாக்குதலும், முகாம்களிலிருந்து அடிக்கப்படும் பீரங்கிச் 'செல்'களும் இந்த யுத்தம் வெறுமனே விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம்தானா என்ற சந்தேகத்தை எழுப்பியுள்ளன.

பெருமளவில் பாதுகாப்பு நிதி சேர்க்கப் படுவதற்கான பிரச்சாரம் முடுக்கிவிடப் பட்டுள்ளதும், பல்லாயிரக் கணக்கில் சிங்கள இளைஞர்கள் படைக்குச் சேர்க்கப் படுவதும், அரசின் திட்டமிட்ட வகையிலான தமிழ் மக்கள் மீதான யுத்த நோக்கை உறுதி செய்கின்றன. தவிரவும் திருகோணமலை, மன்னார், மட்டக்களப்பு, வவுனியாப் பிரதேசங்களில் பெரும் எண்ணிக்கையில் வீதியெங்கும் எரியூட்டப்பட்ட சடலங்கள் காணப்படுவதாக வருகின்ற தகவல்களும், விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையில் யுத்தம் தோன்றியதற்கான காரணங்கள் பல சொல்லப் பட்டாலும், இன்றுவரை கடந்த 14 மாத பேச்சுவார்த்தை விபரங்கள் வெளியிடப்படாமல் இருப்பதும் இலங்கை அரசின் திட்டத்தை சந்தேகத்திற் கிடமில்லாமல் செய்கின்றன. இவற்றிற்கு முத்தாய்ப்பு வைத்தாற்போல் கொழும்பிலும், மலையகத்திலும் பரவலாகத் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப் படுவதும், காரணமின்றி அவர்கள் வைத்திருக்கப் படும் இடத்தைக்கூட தெரிவிக்காமல் உள்ளதும் நடந்து கொண்டிருக்கின்றன.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக ரஞ்சன் விஜேரத்தினவின் மேற்படி பேச்சு அரசின் திட்டமிட்ட தமிழர்க் கெதிரான நடவடிக்கையே இது என தெளிவாக்கியுள்ளது.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்காமல், அவர்களை இரண்டாந்தரப் பிரசைகளாகக் கணிக்கும் நிலையில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாமல், தமிழ் மக்களுக்கு எதிராக யுத்தம் தொடுத்திருக்கிறது இலங்கை அரசு. யுத்தத்தில் யாரால் முதலாவது வேட்டு தீர்க்கப்பட்டது என்பதல்ல நமது பிரச்சினை; யார் மக்களின் நலன்களைப் பிரதிபலிக்கிறார்கள் என்பதே அதுவாகும். பதினான்கு மாதகாலமாக மக்களுக்கு எதுவுமே தெரியாமல் இரகசியமாகப் பேச்சுவார்த்தை நடாத்திவிட்டு, திடீரென சண்டையில் இறங்குவதன் மூலம் மக்களைப் பலிக்கடாக்களாக்குகின்ற இந்த யுத்தத்திற்கு ஜனாதிபதி சொல்வதுபோல் எந்த 'நியாயமும்' கிடையாது, நீதியும் கிடையாது. சண்டையைத் தொடங்கியவர்கள் விடுதலைப் புலிகளே என்பது வாதத்திற்குப் பொருத்தமானதாக இருக்கலாம். ஆனால் சண்டையைத் தொடர்வதற்கு அரசுக்கு அது நியாயமாக இருக்கமுடியாது. ஏனென்றால் அது ஆயிரக் கணக்கான மக்களை உயிர்ப் பலிக்கு உள்ளாக்கியுள்ளது; லட்சக்கணக்கானோரை அகதிகளாக்கியுள்ளது; கோடிக்கணக்கில் சொத்துக்களை நாசம் செய்துள்ளது. முழுத் தமிழ் மக்களையுமே அடிப்படை வசதிகளற்ற நிர்க்கதிக்கு உள்ளாக்கி விட்டுள்ளது.

இந்த அரசுக்கு உண்மையிலேயே பிரச்சினையைத் தீர்ப்பதில் அக்கறை இருந்தால், அது விடுதலைப் புலிகளுக்காகவோ அல்லது வேறெந்த இயக்கங்களுக்காகவோ அல்லாமல் தமிழ் மக்களின் உரிமைகளை வழங்க முனைந்திருக்க வேண்டும்; யுத்தத்திற்குப் பதில் யுத்த நிறுத்தத்தையும், போருக்குப் பதில் சமாதானத்தையும், மாகாண சபைக் கலைப்புக்குப் பதில் ஆறாவது திருத்தச் சட்ட நீக்கத்தையும், யுத்தத்திற்கான பாதுகாப்பு நிதிக்குப் பதில் அகதிகள் புனர் வாழ்வுக்கு நிதி சேர்ப்பதையும், கிழக்குக்கு தனி மாகாண சபை அமைப்பதற்குப் பதில் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதையும் அறிவித்திருக்க வேண்டும். பீப்பாக் குண்டும், 'செல்'லும், பழைய ரயர்களும் தமிழ் மக்களுக்கு சமாதானத்தை, அமைதியை, சுமுகமான பேச்சு வார்த்தையை அரசு விரும்புவதாகப் புரியவைக்கப் போவதில்லை. மாறாக போரை, தனிநாட்டுப் பிரிவினையின் அவசியத்தை மட்டுமே மேலும் உறுதி செய்யப் போகின்றன.

ஏனென்றால், திட்டவட்டமான ஒரு பதிலீட்டை வைக்காமல், யுத்தத்தை முன்வைத்துள்ள அரசின் நோக்கம், யாருக்குப் புரியாவிட்டாலும் இரத்தம் சிந்தி அவதிப்படும் மக்களுக்குப் புரியத்தான் செய்கிறது!.

www.tamilarangam.net



# யாருக்காக இந்த யுத்தம்?

சர்வதேச அங்கீகாரம் பெற்ற லண்டன் ஒப்சேவர் பத்திரிகையின் நிருபர் John Merritt, புகைப்படக் கலைஞர் Roger Hutchings உடன் யாழ் சென்று வந்து எழுதிய கட்டுரை ஒன்று ஏப்ரல் 29, ஞாயிறு லண்டன் ஒப்சேவர் சஞ்சிகைப் பகுதியில் பிரசுரமாகியிருந்தது. அதன் தமிழாக்கமே இது.

துப்பாக்கிச் சன்னங்கள் துளையிட்டுச் சிதிலமடைந்து போன யாழ்நகர்ச் சுவர்களில் ரகசியமாக ஒட்டப்படும் ஒரு இளம்பெண்ணின் சுவரொட்டிகள். கருமயிர்க் கற்றைகள் வளையமிடும் முகம். சோகமான ஆனால் ஒரு அழகிய சிலையின் தீக்ஷண்யம் சுடரும் விழிகள்.

கடந்த ஒரு வருடத்தில் மட்டும் கொலை செய்யப்பட்ட முப்பதாயிரம் பேரில் இந்தப் பெண்மணியும் ஒருவர். இந்த நாட்டில், ஒன்று கூட்டுப் படுகொலைகள் நடைபெறுகின்றன; அடுத்தது இத்தகைய தனிநபர் கொலைகள் நடந்தேறுகின்றன. அப்பட்டமான குரூரத்தின் தன்மையைப் பொறுத்தவரை நினைத்தும் பார்க்க முடியாத அளவுக்கு ஒவ்வொரு தொடர்ச்சியான குரூரமான கொலையும் கடைசியாக நடந்து முடிந்த கொலையோடு போட்டியிடப் பார்க்கின்றன. ஆனால் இந்தப் பெண்ணின் மரணத்தில் நெளிவு, சுளிவு எதுவுமில்லை. இருந்தும் அவளின் சுவரொட்டிகளில் இப்படி ஒரு கேள்வியும் காணப்படுகின்றது. ஆனால் இப்படி ஒரு கேள்வி எழுப்பப் படுவது இங்கு வழக்கத்தில் இல்லைதான்.

"ராஜனியைக் கொன்றது யார்?"

ராஜனி திரணகம முப்பத்தைந்து வயதான ஒரு டாக்டர்; ஒரு விரிவுரையாளர்; பதினொரு வயதான நர்மதா, ஒன்பது வயதான ஷாரிகா ஆகிய இரண்டு சிறுமிகளின் தாய். ஆனால் அவரைச் சாவு அணைத்த விதம் சற்று வித்தியாசமானது. அவரது நண்பர் ஒருவர் தெளிவாய்ச் சொல்கிறார், "ராஜனி சாதாரண மக்களின் குரலும் அபிலாஷைகளும் உரத்து ஒலிக்க வேண்டும் என்று போராடினார். அந்த மக்களின் வாழ்வும், போராட்டங்களும், அவர்களின் குரூரச்சாவுகளும், சின்னா பின்னமாகிப் போன சமுதாயத்தின் சிதைவுகளில் புதைந்து மறக்கடிக்கப் பட்டுவிடக் கூடாது என்பதற்காகவும் போராடிய பெண் அவர்".

யாழ் பல்கலைக்கழக உடற்கூற்றியல்துறைத் தலைவியான ராஜனி கடந்த வருடம் செப்டெம்பர் 21ம் திகதி பல்கலைக் கழகத்தில் இருந்து வீட்டிற்கு சைக்கிளில் திரும்பிக் கொண்டிருக்கும் போது சுட்டுக் கொல்லப் பட்டார். அப்போதுதான் இறுதியாண்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாணவர்களின் பரீட்சைத் தாள்களைத் திருத்தி முடித்திருந்தார். பல்கலைக் கழகத்திலிருந்து வீட்டைநோக்கிப் புறப்பட்ட சில நிமிஷங்களில் - ஆறு மணியிருக்கும், சனசந்தடியில்லாத ஒரு இடத்தை அண்மித்த போது ஒரு கொலையாளியால் சுடப்பட்டார். முதல் துப்பாக்கிக் குண்டு துளைத்து அவர் உடல் சரிந்த பின்னரும் சாவகாசமாக மேலும் நான்கு ரவைகள் அவர் தலையில் தீர்க்கப் பட்டன.

கொலைகாரன் சுட்டுவிட்டு சைக்கிளில் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்த இரண்டு மாணவர்கள் அவ் வழியால் வந்த காரொன்றை மறித்தனர். சாரதி முதலில் சற்றுப் பயந்த போதும் பின்னர் அவரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லச் சம்மதித்தார். ஆஸ்பத்திரிக்குச் செல்லும் வழியிலேயே அவர் உயிர் பிரிந்து விட்டது. அந்த இரண்டு மாணவர்களும் பயத்தினால் தங்கள் பெயர்களைக்கூடச் சொல்லாமலேயே மறைந்து விட்டனர்.

எந்த விதமான விசாரணையும் இல்லாமலேயே சடலங்களைப் புதைப்பதற்கு அநுகூலமாகச் சட்டங்கள் அமைக்கப் பட்டுள்ள இந்த நாட்டில் நடைபெறும் பெருவாரியான கொலைகளைப் போலவே ராஜனியின் கொலையும் எந்த விசாரணைக்கும் உட்படுத்தப் படவில்லை.

ராஜனியின் தாயார் மகிழா ரூப்பியம் கூறுகிறார்,

"எங்கடை ராஜனி ஒரு முட்டாள்பிள்ளை என்று சனம் சொல்லுது. இவ இங்கை நடக்கிற கொலைகளைப் பற்றி கவலைப் படாமல் தானும் தன்ர வேலையுமாய் இருந்திருக்கலாம். ஆனால் அவள் யாரும் கஷ்டப்படுவதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க மாட்டா. சின்னப் பெடியள் துவக்குத் தூக்கிக் கொண்டு திரிவதை அவளால் பார்த்துக் கொண்டு இருக்க முடியாது. எந்தக் காரணத்துக்காக யார் கொலை செய்தாலும் அது பிழைதான் என்று அடிக்கடி அவள் சொல்லுவாள். இப்ப எங்களுக்கு எங்கட பிள்ளையும் இல்லை; அவவின்ரை பிள்ளையளுக்கு தாயும் இல்லை"

16 மில்லியன் மக்களைக் கொண்ட இந்நாட்டின் 2/3 பங்கு மக்களால் பேசப்படுகின்ற சிங்கள மொழிக்கு ஆதரவாக தமிழ் மொழியை முற்று முழுவதாகப் புறக்கணித்து நசுக்கி இலங்கை அரசாங்கமானது தமிழ்ச் சிறுபான்மை இனத்தை சிறிது சிறிதாக அழித்து வருவதை ராஜனி தன் கண்கூடாகக் கண்டார். இந்த அடக்குமுறை மோசமாகிக் கொண்டு வந்தபோது எல்.ரி.ரி.ஈ.யின் தமிழினப் பாதுகாப்பு, சுயநிர்ணய உரிமை ஆகிய இலட்சியங்களுடன் ராஜனியும் தன்னை இணைத்துக் கொண்டது இயல்பானதே. ஆனால் பின்னாளில் புலிகளின் சீரழிவுப் போக்கிற்கு எதிராகக் குரல் கொடுக்கத் தொடங்கினார். "சனங்களைப் பற்றி ஒரு துளியும் அக்கறை இல்லாமல் இளைஞர்களைப் பயன்படுத்திக் கொண்ட ஒரு வெறும் இராணுவ அமைப்பே புலிகளின் இயக்கம்" என்று அவர் கருதினார்.

ராஜனியின் அம்மா, ராஜனி இப்போதும் உயிரோடு இருப்பதைப் போலவே நிகழ்காலத்தில் பேசிக் கொண்டிருக்கிறார். "கொலைகள் நிறுத்தப் படவேண்டும் என்று ராஜனி உறுதியாக இருந்தாள். ஆயுத வன்முறையை அவள் எதிர்த்து நின்றாள்" என்கிறார் மகிழா.

அது ஒரு ஞாயிற்றுக் கிழமை. ராஜனியின் தாயார் மகிழா ரூப்பியம், பக்கத்தில் அவர் கணவர் ராஜசிங்கம் - இவர் யாழ்ப்பாணக் கல்லூரியின் முன்னாள் உப-அதிபரும் தற்போது தனியார் வைத்திய சாலையொன்றில் உயர் நிர்வாகியாயும் பணியாற்றி வருபவர்- தேவாலயத்திற்குச் சென்றுவிட்டு வந்து தமது வீட்டின் முன் விறாந்தையில் உட்கார்ந்து உரையாடிக் கொண்டிருக்கிறார்கள். வீட்டிலிருந்து பார்க்க அயலில் உள்ள L.T.T.E. முகாம் தெரிகிறது. நாட்டு நிலைமைக்குப் பயந்து வெளிநாடு சென்று விட்ட இவர்களது உறவினர்களின் வீடொன்றைத்தான் புலிகள் தமது முகாமாக்கி இருக்கிறார்கள்.

மகிழா கூறுகிறார், "எங்களுக்குப் பயமாக இருக்கிறது. யார் மகளைக் கொன்றது என்று நிச்சயப்படுத்தாமல் இருப்பதே நல்லது. எங்களுக்கு வயது போய் விட்டது. நாங்கள் இந்த வீட்டைவிட்டு எங்குதான் போவது? யாரையும் குற்றம்சொல்லி என்ன ஆகிவிடப் போகிறது? எங்களுக்கு எங்கடை பிள்ளை என்ன திருப்பிக் கிடைக்கவா போகுது?"

ராஜசிங்கம் அயலில் உள்ள L.T.T.E.யின் முகாமைச் சுட்டிக் காட்டிவிட்டுக் கூறுகிறார், "புலிகள் அந்த வீட்டுக்கு வருமுன்பு, ஒரு வருஷத்துக்கும் மேலாக இந்தியப் படையினர்தான் அங்கு தங்கி நின்றனர். அப்போது ராஜனி எழுதி வைத்திருந்த குறிப்புக்களையும், கொலைகளைப் பற்றி அவள் திரட்டி வைத்திருந்த அறிக்கைகளையும் அவர்கள் வந்து எடுத்துச் சென்றனர். அதற்கு முன்னர், இலங்கை ராணுவம் எங்கள் வீட்டிற்குள் புகுந்து எங்கள் உடைமைகளை நாசமாக்கிவிட்டுச் சென்றனர். எங்கள் குடும்பப் புகைப்படங்களைக்கூட அவர்கள் விட்டுவைக்கவில்லை."

இலங்கை அரசபடையினர் ராஜனியின் மூத்த சகோதரியை அப்போது தேடிக்கொண்டிருந்தனர். யாழ் பல்கலைக் கழகத்தில் ஆங்கிலப் போதனாசிரியையாக இருந்த அவர் இப்போது லண்டனில் புகலிடம் கோரியுள்ளார்.

L.T.T.E. உறுப்பினர்களுக்கு தமது வீட்டில் அடைக்கலம் கொடுத்தார் என்ற குற்றச் சாட்டின் பேரில் ஒரு டாக்டர், மூன்று மத குருமார்களுடன் ராஜனியின் சகோதரியும் கைது செய்யப் பட்டிருந்தார். வெலிகடைச் சிறைக்குள் நடைபெற்ற படு கொலையிலிருந்து தப்பிய ஒரு சிலரில் இவரும் ஒருவர்.

"குணங்குறி எதுவுமில்லாமல் சகட்டு மேனிக்கு ஒருவரை ஒருவர் சுட்டுக் கொண்டிருக்கும் இந்த நிலையில் எங்கள் ராஜனியை யார் கொன்றது என்று கேட்பதில் என்ன அர்த்தம் இருக்கிறது?" என்று கேட்கிறார் ராஜசிங்கம்.

---

'தனி நபர்களைப் பழிவாங்கும் நோக்கம் புரட்சி நடவடிக்கைகளின் அம்சமாகாது. ஏகாதிபத்திய இராணுவத்தின் சிப்பாய்களைப் போன்றவர்களல்ல நாங்கள். அவர்கள் மனித இயந்திரங்கள். எவ்வித ஈவிரக்கமும் இன்றி 'கட்டுப்பாடாகக்' கொலை செய்வதற்கு மட்டுமே கற்பிக்கப் பட்டவர்கள் அவர்கள். நாங்கள் மனிதனை மதிக்கிறோம். மனித உயிர்களை வார்த்தைகளால் விவரிக்க முடியாத அளவிற்கு நேசிக்கிறோம்.'

— பகத்சிங்கின் நீதிமன்ற விரிவுரையிலிருந்து.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"ராஜனி மிகவும் நேர்மையான பிள்ளை. இலங்கை அரசும் இந்தியப் படையும் நடத்திக் கொண்டிருந்த மாணவப் படுகொலைகளைப் பற்றி ஒரு விசாரணையை மேற்கொள்ள வேண்டும் என்ற தனது யோசனையைப் பல்கலைக் கழக நிர்வாகம் ஏற்க மறுத்தபோது ராஜனி ஒருமுறை அழுதவாறே பல்கலைக் கழக செனேற் கூட்டத்திலிருந்து வெளியேறினாள். தமிழ் மக்கள் மத்தியில் மாத்திரமல்ல சிங்கள மக்கள் மத்தியிலும் அவள் டாக்டராகப் பணியாற்றினாள். அவ்வாறு அவள் வேலை செய்திருக்க வேண்டியதில்லை என்று கருத்துத் தெரிவித்தவர்களும் உண்டு. யாழ்ப்பாண ஆஸ்பத்திரியிலும் இரவுபகலாக முழுமூச்சுடன் அவள் வேலை பார்த்தாள். நான் பணிபுரியும் தனியார் வைத்தியசாலைக்கு ராஜனி வரும்போதும் அங்குள்ள ஏழை எளியதுகளைப் பார்த்து, 'இங்கு ஏன் வருகிறீர்கள்? அரசாங்க ஆஸ்பத்திரிக்குச் செல்லுங்கள். அங்குவந்து நான் ஒரு காசும் இல்லாமல் வைத்தியம் பார்க்கிறேன்' என்று சொல்லுவாள். பிறர் கஷ்டம் எதையும் அவள் தாங்கிக் கொள்ளமாட்டாள். தனது இரண்டாவது குழந்தையைப் பிரசவிக்கும் கடைசி நிமிஷம் வரையிலும் கூட ராஜனி ஏழைகளுடனும் நோயாளிகளுடனுமே வாழ்ந்தாள்", என்கிறார் ராஜசிங்கம்.

இங்கிலாந்தில் தனது மூன்றுமாத ஆராய்ச்சியைச் சடுதியாக முடித்துக் கொண்டு தனது மருத்துவ மாணவர்களுக்கு பரீட்சைத் தேர்வுகளில் உதவுமுகமாக, அவர் கொலை செய்யப்படுவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்புதான் ராஜனி யாழ் திரும்பினார்.

"எரிகின்ற இந்தத் தேசத்தில் இருந்து 'புத்தியுள்ள' ஒவ்வொருவரும் வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். இங்கு வைத்தியசாலைகளில் டாக்டர்கள் இல்லை; பல்கலைக் கழகங்களில் ஆசிரியர்கள் இல்லை. யுத்தத்தில் நொறுங்கி சிதையுண்டு போன கட்டிடங்களைத் திருப்பிக் கட்ட வழியில்லை. என்சினியர்கள் இல்லை, மேசன் மார்களைக் காணோம், ஊழியர்கள்கூட இல்லை. குடும்பங்களைத் தாய்மார்தான் கொண்டு நடத்துகிறார்கள். அழுது புலம்புவதற்குக்கூட குடும்பத்தில் யாரும் இல்லாமல்- இறந்தவர்களைப் புதைப்பதற்கு ஆண்பிள்ளைகளும் இல்லாமல், வயதானவர்களும் நோயுற்றவர்களும் அலுத்துக் களைத்தோருமாய் சனங்கள் நாளும் செத்துக் கொண்டிருக்கிறார்கள்" என்று ராஜனி ஒரு சந்தர்ப்பத்தில் எழுதினார்.

பல்கலைக்கழக மருத்துவ பீடத்துறையை இந்திய ராணுவம் ஆக்கிரமித்துக் கொண்டு அங்கு தங்கிநின்ற போது ராஜனி தனி ஆளாக நின்று பல்கலைக் கழகத்தை மீண்டும் திறக்க அரும்பாடுபட்டார். அல்லது பல்கலைக் கழகம் மீண்டும் திறக்க 2 வருஷங்களாவது எடுத்திருக்கும். குண்டு வீச்சால் சிதைந்து போயிருந்த கட்டடங்களைச் சீர்படுத்த ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த வேளையிலும்கூட பல்கலைக் கழகத்தில் நின்று வேலை பார்த்திருக்கிறார். "எங்களது எதிர்காலத்தை நாங்களே நிர்ணயிக்கும் மன உறுதியை நாங்கள் காட்டியாக வேண்டும்" என்ற ராஜனியின் மனத்திடம் அவரது சக விரிவுரையாளர்களையும் இறுதியில் இவருடன் சேர்ந்துழைக்கத் தூண்டியது. வண்டனிலிருந்து திரும்பிய கையாடு பல்கலைக் கழக உப வேந்தருக்கு ராஜனி எழுதிய கடிதத்தில் அவர் குறிப்பிட்டிருந்தார், 'எனது சொந்தமக்களை விட்டு எனக்கு வாழ்க்கை என்று வேறு ஒன்று இல்லை. அதனால்தான் நான் இங்கு வந்திருக்கிறேன்'.

நசுக்கப்பட்ட தமிழ் மக்களின் குரலாக இல்லாவிட்டாலும் தமிழினப் படுகொலைக்கு எதிராக வெற்றிகரமான போராட்டத்தைக் கொண்டு நடத்துவதில் புலிகள்தான் பெரும் நம்பிக்கையாக அமைந்தார்கள். இந்திய-இலங்கை ராணுவம் எந்த அளவுக்கு காட்டுமிராண்டித் தனத்தைக் கட்டவிழ்த்து விட்டதோ அந்த அளவுக்கு வட,கிழக்கில் புலிகளுக்கும் ஆதரவு வளர்ந்தது. இலங்கை, இந்திய இராணுவம் நடத்திய குரூரக் கொலைகளை ஆதாரங்களுடன் அம்பலப் படுத்துவதில் ராஜனி கடுமையாக உழைத்தார்.

வாளால் வெட்டிக் கை, கால்கள் துண்டிக்கப்பட்ட நிலைக்குள்ளான இளைஞர்கள்; கவச வண்டிகளில் நசுங்குண்ட மனித தலைகள்; 'அசிற்'றுக்குள் அமிழ்த்தப்பட்ட உடல்கள்; பாலியல் வன்முறைகள்; கழுத்து நெரித்துக் கொல்லப் பட்டோர்; மரங்களிலும் மின் கம்பங்களிலும் தொங்கும் உடல்கள்; சாலையோரங்களில் டயரில் கொளுத்தப்பட்டு கருகி எரியும், துப்பாக்கிக் குண்டுகள் துளைத்த சடலங்கள்; அனைத்தையும் ராஜனி அம்பலப்படுத்தினார்.

புலிகளும் இதே அட்டூழியங்களைச் செய்தபோதும், புலிகள் இளைஞர்களை இராணுவமயப் படுத்திக் கொண்டு போன போக்கினையும் வெளிக் கொணர்வதில் ராஜனி முன்நின்றார். விடுதலைப் புலிகளைச் சேர்ந்த பெரும்பாலான இளைஞர்கள் லட்சியக் கனவுகளில் இறந்து போயிருந்தனர்.

மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் அமைப்பு ஒன்றினை சில விரிவுரையாளர்களின் துணையுடன் ராஜனி ஸ்தாபித்து, அந்த அமைப்பின் அறிக்கைகளை சகல மனித உரிமை ஸ்தாபனங்களுக்கும் சுற்றுக்கு அனுப்பிக் கொண்டிருந்தார். "ராஜனியைப் பொறுத்தவரையில், எங்கு மனித உயிர் பலியிடப் பட்டாலும் எந்தவிதமான கட்சி அல்லது இயக்க சார்புமின்றி அதனை அம்பலப் படுத்த வேண்டுமென்று கருதினார். எல்லாவற்றுக்கும் மேலாக, நாங்கள் மனித உயிர்களை மதிக்கிறோம் என்பதை நாங்கள் வெளிக்காட்ட முனைந்தோம்" என்று இந்த அமைப்பைச் சார்ந்த ஒரு பேராசிரியர் கூறுகிறார்.

மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்களின் அமைப்பின் செயற்பாட்டினைப் பற்றி விபரிக்கையில் ராஜனி பின்வருமாறு குறிப்பிட்டார்.

"ஒரு பக்கச் சார்பின்மை, சத்தியத் தேடல், விமர்சன ரீதியிலான நேர்மையான கண்ணோட்டம் என்பன எங்களின் இன்றைய சமூகத்தின் ஜீவாதாரமான அம்சங்கள். ஆனால் இத்தகைய ஒரு நிலைப்பாடு எங்களில் பலரது உயிரைக் காவு கேட்டு நிற்கிறது. மந்தித்துப் போன எங்கள் சமூகத்திற்கு ஒரு புத்தியக்கத்தைக் கொண்டு சேர்க்கவே இத்தகைய ஒரு நிலைப்பாட்டை நாம் வரித்துக் கொண்டோம்".

1987 ஜூலை மாதத்தில் அமைதியை நிலைநிறுத்த இந்திய அமைதிப் படை வந்திறங்கியதை அடுத்து புலிகளுக்கு மக்கள் மத்தியில் ஆதரவு வளர்ந்தது. ஆஸ்பத்திரிகளையும் அகதி





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தைரியம்

எடுத்ததற்கெல்லாம் அஞ்சும் இயல்புடைய கோழையொருவன் தன்னைப் பல சாஸ்திரங்கள் கற்றவனென்றும் அறிவாளியென்றும் சொல்வானானால், அவனை நம்பாதே. அவன் முகத்தை நோக்கிக் காறியுமிழ்ந்துவிட்டு அவனிடம் பின்வருமாறு சொல்:

"அப்பா! நீ ஏட்டைத் துளைக்கும் ராமபாணப் பூச்சியைப் போல், பல நூல்களைத் துளைத்துப் பார்த்து ஒருவேளை வாழ்நாளை வீணாக்கி இருக்கக் கூடும். ஆனால் அச்சம் இருக்கும் வரை நீ அறிவாளியாக மாட்டாய். அஞ்சாமைக்கும் அறிவுக்கும் நமது முன்னோர்கள் ஒரே சொல்லை உபயோகப் படுத்தியிருக்கிறார்கள். அதை நீ கேள்விப்பட்டதில்லைப் போலும்!"

ஆம், அச்சமே மடமை. அச்சமில்லாமையே அறிவு. விபத்துக்கள் வரும்போது நடுங்குபவன் மூடன். அவன் எத்தனை சாஸ்திரம் படித்திருந்தாலும் மூடன்தான். விபத்துக்கள் வரும்போது எவன் உள்ளம் நடுங்காமல் துணிவுடன் அவற்றையெல்லாம் போக்க முயற்சி செய்கிறானோ, அவனே ஞானி. 'ஹரி ஓம்' என்று எழுதத் தெரியாத போதிலும் அவன் ஞானிதான்.

— பாரதியார்

முகாம்களையும்கூட விட்டு வைக்காமல் சகல இடங்களிலும் அப்பாவி மக்களைப் படுகொலை செய்தும், புலி எதிர்ப்பு இயக்கங்களுக்கும் அரசாங்க விரோத தமிழ் இராணுவ அமைப்புக்களுக்கும் இத்தகைய படுகொலை செயலைக் குத்தகைக்கு விட்டும், இந்திய அமைதிப்படை மேற்கொண்ட அட்டூழியங்களால் IPKF என்பது 'மக்களைக் கொன்றொழிக்கும் இந்தியப்படை' என்றானது. இந்திய அரசால் இராணுவப் பயிற்சி வழங்கப்பட்ட ஆயுதக் குழுக்களால் இராணுவ அமைப்புக்கள் நாடெங்கும் பெருக ஆரம்பித்தன. இந்தக் குழுக்களுக்கு இரண்டு விஷயங்கள் பொதுவாக இருந்தன. ஒன்று கொலை பற்றிய குருட்டு வெறி – இது ஒவ்வொரு நபரையும் யாரோ ஒருவனின் எதிரியாக இனங்கண்டது. மற்றது, விடுதலை என்ற பதாகைக்குள் அவை பதுங்கிக் கொண்டிருந்தன.

1987 அக்டோபரில் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் டாக்டர்கள், நோயாளிகள் உட்பட 70 பேரைச் சுட்டுக் கொன்ற இந்திய அமைதிப் படையின் படுகொலைச் சம்பவத்தை வெளியிடவோ, கொலை செய்யப்பட்ட தமது சக டாக்டர்களின் மரணத்திற்கு பகிரங்கமாக நினைவஞ்சலி செலுத்தவோ முன் வருவதற்கு டாக்டர்களே பயந்து கொண்டிருந்தபோது ராஜனி அந்தப் படு கொலை நிகழ்ச்சியின் போது உயிர் தப்பிப் பிழைத்திருந்தவர்களை நேரில் சென்று சந்தித்து விசாரணை மேற்கொண்டார். இந்த நேர் விசாரணையில், தான் கண்ட அநுபவத்திலிருந்து அவர் எழுதினார், "இரவு முழுதும் இறந்துபோன சடலங்களின் கீழ் சத்தமில்லாமல் படுத்துக் கிடந்தோம். இதில் ஒருவனுக்கு இருமல் வந்து இரவில் லேசாய் முனகினான். இதைப் பார்த்த ஒரு இந்திய 'ஜவான் அவனை நோக்கி ஒரு குண்டை எறிந்தான். இருமிய அவனோடு சேர்ந்து வேறு கொஞ்சம் பேரும் அந்த இடத்திலேயே இறந்து போனார்கள். இன்னொரு இடத்தில் கைகளை மேலே உயர்த்தியபடி ஒருவர் அழுதுகொண்டு உரக்கச் சொன்னார், "நாங்கள் அப்பாவிகள், நாங்கள் இந்திரா காந்தி அம்மாவுக்குத்தான் ஆதரவு." அவனை நோக்கி ஒரு குண்டு எறியப்பட்டது. அவனும் அவனுக்கு அடுத்திருந்த அவனது சகோதரனும் அந்த இடத்திலேயே இறந்து போனார்கள்.

வெடித்த கிறனைற்றுகள் பயங்கர சத்தத்தை எழுப்பின. சிதறல் துண்டுகளும் தூசும் அப்படியே எங்கள் மீது படிந்தது. சற்று முன்னர்தான் இறந்து போயிருந்தவர்களதும், காயமுற்றோரதும் வடியும் ரத்தத்தில் அவை அழுந்தப் படிந்து கொண்டன"

ராஜனி தன்னோடு ஓரிரு பெண்களையும் சேர்த்துக் கொண்டு அந்தப்பகுதி முழுவதும் சைக்கிளில் சென்று இந்தப் படுகொலைகளைப் பற்றியும், சித்திரவதைகள் பற்றியும், பாலியல் வன்முறைகள் பற்றியும் தகவல்கள் சேகரித்தார். பாலியல் வன்முறைகள் பரவலாக இடம்பெற்ற பொழுதிலும் அவை வெளியில் தெரிய வந்தால் ஏற்படக்கூடிய விளைவுகளால் அவை மூடிமறைக்கப் பட்டிருந்தன.

தாய்மாரதும் இளம் பெண்களதும் அநுபவங்களைக் கேட்டறிந்து அவர்களுக்கு ஆதரவு வழங்கி தன்னால் அவர்களுக்கு முடிந்தவரை உதவினார். "இங்கு பெண்கள் என்றால் நகைகளைத்தான் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருப்பார்கள். ஆனால் ராஜனி சாகும்போது அவளிடம் ஒரு குண்டுமணிகூட இருக்கவில்லை. அவள் தன்னிடம் இருந்த சகலவற்றையும் மற்றவருக்கு கொடுத்து விட்டிருந்தாள்", என்று அவரது தந்தை கூறுகிறார்.

ராஜனி நம்பிக்கை இழந்துபோன ஆதரவற்ற பெண்களை ஒருங்கிணைத்து அவர்களை வலுப்படுத்தப் பெரிதும் பாடுபட்டார். 'பூரணி' என்ற மையத்தை நிறுவி, அவர்கள் பெண்கள் சுயசார்பு அடிப்படையில் தமது வாழ்க்கையை மீள அமைக்கக்கூடிய வசதிகளை ஏற்படுத்தினார். வட இலங்கையில் மிகவும் தனித்துவமான ஒரு அம்சத்தை நீங்கள் இங்கே காணலாம். ஆம், இங்கு பெண்கள் சேர்ந்து சிரிக்கிறார்கள்!

ராஜனி ஒரு சந்தர்ப்பத்தில் எழுதினார், "சாதாரண பெண்களுக்குப் பெரும் துணிச்சலும், தனியே எதனையும் எதிர்த்துப் போராடும் வல்லமையும், ஒற்றுமையாய் இயங்கவும் இயலும் என்பதை நான் நிச்சயம் நிரூபித்துக் காட்டுவேன்"

ராஜனியின் இத்தகைய பணிகளால் புலிகள் இவரைத் 'துரோகி' என்று கருதினார்கள்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"இந்திய இராணுவ வீரன் ஒருவன் இறந்தால்கூட ராஜனி அழுவாள், என்று அவர் பற்றிச் சொல்லுவார்கள்", என்று அவரது அம்மா சொல்கிறார்.

இந்தப் 'பூரணி' என்ற அமைப்பில் இருந்த சில இளம் பெண்கள் இப்போது விடுதலைப் புலிக்குள் சேர்க்கப் பட்டிருப்பதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

இரண்டு வருடமாகக் காடுகளிலும் நகர்ப் புறங்களிலுமாக புலிகள் நடத்திய யுத்தத்தில் 1500க்கும் அதிகமான இந்திய வீரர்களையும், இந்தியப் படையின் ஆதரவில் இயங்கிய இராணுவ அமைப்புக்களைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான உறுப்பினர்களையும் தாங்கள் கொன்றிருப்பதாகப் புலிகள் கூறுகிறார்கள்.

இந்த இராணுவக் குழுக்களைச் சேர்ந்த இளம் பிள்ளைகள் துப்பாக்கி முனையில் திரட்டப்பட்டவர்கள் என்ற உண்மையை புலிகள் கவனத்தில் எடுக்கவேயில்லை. எதிரிக்கு அனுசரணையாக நடந்ததாகத் தாங்கள் தீர்மானித்துக் கொண்டால் அந்த நபரையோ அல்லது அவரது உறவினர்களைக்கூடப் புலிகள் படுகொலை செய்தனர்.

### தற்கொலையும் சமூகமும்.

மனிதனின் இலட்சியம் நல்லதொரு வாழ்க்கையை மேற்கொள்ளுவதே; அதைவிட்டு அவனது இயற்கையான எண்ணங்களுக் கெதிராகத் தற்கொலை செய்து கொள்ளக் கூடாது. தற்கொலை என்பது சமுதாயத்தின் மீது கொண்ட அனைத்து நம்பிக்கைகளிலும் ஏமாற்றம் எற்படும் பொழுது ஏற்படுகின்ற ஒரு உந்துதல் தானேதவிர வேறல்ல. எனவே சமுதாயத்தின் மீது நாம் இழந்த நம்பிக்கையை மீண்டும்பெற, நல்லதொரு சமுதாயம் அமையப் பாடுபடவேண்டும். அப்படியான நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கும் போராட்டத்தில் நாம் மரணம் அடைந்து விட்டால்கூட கவலைப்பட வேண்டியதில்லை. நமது போராட்டம் வெற்றி பெறுவதற்காக நமது மரணம் பயன்படட்டும்.

*- மாவோ*

ஒருமுறை விடுதலைப் புலிகள் நடத்திய திடீர்த் தாக்குதலில் ஆறு இந்திய வீரர்கள் கொல்லப்பட்டதும் இந்திய அமைதிப் படையினர் யாழ்ப்பாணத்தின் ஒரு கரையோரச் சிறு நகருக்குள் வெறிகொண்டது போல் புகுந்து மூன்று நாட்களாக அதனைத் தீயிட்டு, கொள்ளையடித்ததுடன் சிறு குழந்தைகள் உட்பட 51 அப்பாவிப் பொது மக்களைக் கொலை செய்தனர். மருத்துவ சேவையாளர்கள் இவர்களின் சடலங்களை நாய்கள் குதறிய நிலையில் வீதியோரங்களில் கண்டனர். 5000ற்கும் மேற்பட்ட பொது மக்கள் தங்கள் வீடு, வாசல்களை இழந்து நின்றனர்.

அச் சந்தர்ப்பத்தில் லண்டனில் இருந்த தனது நண்பர்களுக்கு ராஜனி எழுதிய கடிதத்திலிருந்து ஒரு பகுதி,

"கொலைச் சம்பவங்களா?
எத்தனை பேர் என்றா?
உதாரணத்திற்கு ஒன்றா கேட்கிறீர்கள்?
தயவுசெய்து இப்போது வேண்டாம்
என் மனமே நெரிக்கப்பட்டிருக்கிறது.
ஓம்! இப்படித்தான் நாங்கள் வாழ்ந்து
கொண்டிருக்கிறோம்.
வேதனையும் துக்கமும் அச்சமும்–
ஆம்,
எப்போதும் அச்சத்தில்!
உங்களை ஒன்று கேட்கிறேன்–
ஜனங்கள் கும்பல் கும்பலாய்
செத்து விழுந்து கொண்டிருக்கையில்
உங்களால் எழுத வருமா?

அவர்கள் எறும்புகளைப்போல
சாவதைப் பார்த்துக்கொண்டு
இங்கே
அதோ அங்கே
ஆஸ்பத்திரி நடைபாதைகளில் வீசப்பட்டு
நாய்களும் காகங்களும் குதறிய
நிலையில்–

உங்கள் அயலவர்களை
அவர்களின் வளவுகளுக்குள்ளேயே
புதைக்க நேர்கையில்–

ஆயிரமாயிரமாய் மக்கள்
கோயில்களில்
தேவாலயங்களில்
பாடசாலைகளில்
நெருங்கி வழிவதை–

கோயில் உள்வீதிகளின்
அழகிய மணற்பரப்பு
மலக் குழிகளாய்,
ஜனத்திரளின் நரகக்குழிகளாய்
மாறுகையில்–
எப்படி நீங்கள் எழுதுவீர்கள்?

ஜனங்களைப்பற்றி யாருக்கு அக்கறை?
அரசு, இந்திய ராணுவம்,
புலிகள், மற்ற இயக்கங்கள்
யாருக்குமே கவலையில்லை!

நாங்கள் இன்று பொறியில் அகப்பட்ட
மக்கள்
ஒரு தற்கொலைப் பாதையில்
நடக்க நிர்ப்பந்திக்கப் பட்டிருக்கிறோம்.

எங்களின் வீரத் தளபதிகள்,
விடுதலைப் போராளிகள்,
எதிரிகளை, எங்கள் படலை
வாசலுக்குள்–
ஆஸ்பத்திரிகளுக்குள்
கொண்டு வந்து சேர்ப்பதில்
கெட்டிக்காரர்கள்.

பிறகு என்ன? யுத்தம் –
கண்ணி வெடியைக் கொளுத்து!
ஒவ்வொரு அகதி முகாமிற்குள்ளும்
ஒளிந்து கொண்டு சுடு!
பிறகு பாதுகாப்பாய் தப்பி ஓடிவிடு!
ஓம்,
புலிகள் பின்வாங்கி விடுவார்கள்

நாங்கள்
பலிக் கடாக்கள்
கும்பல் கும்பலாய்
செத்து விழுகிறோம்"

– ராஜனி.

விடுதலைப் புலிகளுக்கும் இந்திய இலங்கைப் படைகளுக்கும் இடையிலான போர்நிறுத்தம் அமுலான இரண்டாவது நாளில் ராஜனி படுகொலை செய்யப்பட்டார். இந்திய இராணுவம் வெளியேறி வடமாகாணத்தின் நாளாந்த வாழ்க்கையின் மீது விடுதலைப் புலிகள் அதிகார பூர்வமான கட்டுப்பாட்டை வழங்கும் ஒப்பந்தத்தைப் புலிகள் பெற்றுக்கொண்ட நிலையில் ராஜனி சுடப்பட்டார்.

சட்டத்தை அமுலாக்கும் பொறுப்பு அவர்களிடமே பூரணமாக ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் சொல்கிறார், "எங்களிடம் ஆயுதபலம் இருக்கிறது; நாங்கள் பலத்தின் தளத்திலிருந்து கதைக்கிறோம்."

மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்களின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அமைப்பு, 'முறிந்த பனைமரம்' என்ற தலைப்பில் ஒரு ஆய்வறிக்கையை வெளியிடத் தீர்மானித்திருந்தனர். ராஜனி கொலை செய்யப் படுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னதாகவே இந்த அறிக்கையின் பல பிரதிகள் ரகசியச் சுற்றுக்கு விடப்பட்டன.

இளஞ்சிறுவர்கள் இராணுவ மயமாக்கப் படுவதையும், வெறும் ராணுவ நடவடிக்கைகள் மட்டுமே உண்மையான விடுதலையை வென்றெடுக்க வல்லனவா என்பதனையும் இந்த ஆய்வறிக்கை கேள்விக்குட்படுத்தியிருந்தது.


ஒருவேளை ராஜனியின் தலைவிதியை இதுதான் முற்றாக்கியதோ?

ராஜனி எழுதுகிறார்,

"ஆயுதங்களற்ற சனங்களின் அபிப்பிராயங்களுக்கும் தேவைகளுக்கும் ஒரு இடமுமில்லை. புலிச்சின்னங்கள், புலி நீதிமன்றங்கள், புலிகளின் திறப்பு விழாக்கள். சனங்கள்தான் வெளியில் - தங்களின் போராட்டப் பாதையையே தீர்மானிக்க மாட்டாமல்".

ராஜனி மரணமடைந்த இரண்டு நாட்களுக்குப் பின்னர் லண்டனுக்கு வந்து சேர்ந்த ஒரு கடிதத்தில் ராஜனி எழுதியிருக்கிறார்; "ஒரு நாள் துப்பாக்கிகள் என்னை மௌனிக்கப் பண்ணிவிடும். ஒரு வெளியாளால் அல்ல, இந்த என் சமூகத்தின் கர்ப்பப்பையில் உருவான ஒரு மகனால் - என் வாழ்வோடும் வரலாற்றோடும் பிணைந்த இந்த மண்ணின் மகள் ஒருத்தியால் இந்தச் சாவு என்னை வந்து சேரக்கூடும்".

மகாகவியின் குறும்பா




*தொலைபேசி யிற் பேசிப் பேசித்*
*தொந்தரவுக் குள்ளானான் காசி.*
*மலரை மணந் தான்! எனினும்*
*வாழ்கின்றான் - மீண்டும் அதே*
*தொலை பேசி யிற் பேசிப் பேசி.*

'விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி' என்ற பெயரில் சட்டபூர்வமான அரசியல் கட்சியை ஆரம்பித்திருக்கும் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், "தேசிய அபிவிருத்தி மற்றும் தமிழ் மக்களின் காணி, கல்வி, நிதி போன்ற பிரச்சினைகள் குறித்த ஒரு சுயேச்சையான அமைப்பை - ஒரு மாடலை நாம் ஆக்கவேண்டும்", என்கிறார்.

யாழ்ப்பாணத்தில் வசதியில்லாத மக்கள் மாதாந்தம் 2000/- பணத்தை (33 ஸ்டேர்லிங் பவுண் அல்லது பத்து மூட்டை சீமெந்து வாங்கும் காசு) அரசாங்கத்திடமிருந்து பெற்றுக் கொள்வதற்காக நாள் பூராவும் கியூவில் நிற்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் நூற்றுக்கணக்கான சிறுவர்கள் மூளைக்காய்ச்சலால் பீடிக்கப் பட்டிருக்கிறார்கள். 5 வயதிற்குக் குறைந்த சிறுவர்களில் 75 வீதமானோர் போஷாக்குக் குறைவால் பாதிக்கப் பட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தில் தற்கொலை வீதம் உலகிலேயே ஆகக்கூடியதாகும்.

ராஜனி இறந்ததும் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் - இவர்களில் பெரும்பாலானோர் மாணவர்களும் ஏழைகளுமாவர் - அச்சுறுத்தலையும் மீறி யாழ்ப்பாணத்தில் மௌன ஊர்வலம் சென்றனர். ஆனால் இது போன்ற உணர்ச்சி வெளிப்பாட்டு நிலைமைகளை 12 வயதுச் சிறுவர்கள் கட்டுப்பாட்டிற்குள் கொணர்ந்துள்ளனர். ஆனையிறவில் இந்தச் சிறுவர்கள் ஒவ்வொரு வாகனத்தையும் நிறுத்தித் தங்களின் எதிரிகளைத் தேடுகிறார்கள். தலையாட்டிகள் தங்களுக்குத் தெரிந்த புலிகள் ஆதரவாளர்களை இனங்கண்டதும் தலையாட்டுகிறார்கள். இந்தத் தொடர்ந்த அடையாள அணிவகுப்பில் ஒவ்வொருநாளும் எத்தனைபேர் காணாமல் போகிறார்கள் என்று ஒருவருக்கும் தெரியாது.

பதினான்கு வயதுச் சிறுவர்களைக்கூட இயக்கத்தில் சேரக் கோரும் விடுதலைப் புலிகளின் சுவரொட்டிகள் 'புலிகள் அழுவதில்லை' என்ற வரிகளைத் தாங்கி நிற்கின்றன. எல்.ரி.ரி.ஈ பிரமுகர்கள் புலிகளின் அரசியல், இராணுவப் பயிற்சிக்கு 13 அல்லது 14 வயது எல்லைக் கட்டுப்பாடு இருக்கிறது என்று கூறுகிறார்கள். ஆனால் தனது படைப் பிரிவின் களப்பயிற்சிகளை ஒரு மொனிட்டர் கொப்பியில் பாடசாலை, திகதி, பெயர், பாட வாரியாகப் பதிவு செய்து வைத்திருக்கும் ஒரு புலிகள் பிரிவின் கொமாண்டர், மிகவும் சுளுவாக ஒரு 12 வயதுச் சிறுவன் ஒரு 'கலாஷ்னிகோவ்' ஆயுதத்தைக் கழற்றிப் பூட்டுவதைப் பெரும் மகிழ்ச்சியோடு காட்டுகிறார்.

ஒரு கடைக்காரர் இத்தகைய சிறு பையன்களின் பாதங்களில் புதிய பூட்ஸ்களால் ஏற்பட்ட புண்களை ஆற்றுவதற்கு ஏதோ ஒரு ஜாதி மருந்து தனது கடையில் நன்றாக விலை போய்க் கொண்டிருக்கிறது என்கிறார். புலிகள் இயக்கத்தில் அண்மையில் சேர்ந்துவிட்ட தனது 13 வயது மகனைப்பற்றி வெறுப்போடு பேசிக்கொண்டிருந்த அவர், சில புலிகள் வந்ததும் திடீரென பேச்சை நிறுத்திக்கொண்டு விட்டார். நாங்கள் பேசுவது கேட்காத ஒரு நாற்பது யார் தூரத்தைத் தாண்டி புலிகள் போய் விட்டதும் அவர் என் கைகளைக் குலுக்கிவிட்டு 'மன்னித்துக் கொள்ளுங்கள்' என்றார்.

ராஜனியின் பணிகளைத் துணிச்சலோடுகூடிய சிலர் இன்றும் தொடர்கிறார்கள். ஆனால் அவர்களோடு கதைப்பது என்பது மிகவும் ரகசியமாகவே மேற்கொள்ளப் படுகிறது. வீதிகளைக் கடக்கும் அநாமதேய நபர்களின் சமிக்ஞைகளைப் புரிந்து கொண்டு முன்னரே தீர்மானிக்கப்பட்ட இடங்களில்தான் இச் சந்திப்புகள் நிகழ்கின்றன.

"தியாகம், துரோகம் என்ற பதங்கள் புலிகளின் அகராதியின் மந்திர உச்சாடனங்கள். அதிகாரத்தில் இருக்கும் இவர்களின் அரசியல், துப்பாக்கிக் குழலிலிருந்து பிறந்து கொண்டிருக்கும் வரை மக்களுக்கு அமைதியோ, நன்மையோ ஒரு நாளும் ஏற்படப்போவதில்லை. நாங்கள் இப்போது ஒரு சீரழிந்த அரசியலுக்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். யாரும் கேள்வி எழுப்பினால் அவன் விடுதலைத் துரோகி என்று எங்களின் எதிர்காலத் தலைமுறைக்குப் போதிக்கப் படுகிறது. கேள்விக்கிடமில்லாத பூரண விசுவாசம் அதற்கேயுரிய விசேஷ பலத்தைக் கொண்டுள்ளது என்பதுதான் இன்றைய கோட்பாடு. இதை உறுதிப் படுத்துவதுபோல் 'செய்துகாட்டுகிறேன் பார்' பாணியில் பச்சைப் பாலகர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அணி திரட்டப் படுகிறார்கள்" என்று விசனிக்கிறார் ஒருவர். ஏற்கனவே தனது உயிருக்கு புலிகளால் எச்சரிக்கை விடுக்கப் பட்டிருக்கும் இவரின் பேச்சு புலிகளின் பாஷையில் 'தேசத்துரோகத்தை'(?) வெளிப்படுத்துவது போல் படுகிறது.

தற்போதைக்கு "யார் ராஜனி திராணகமவைக் கொலை செய்தது?" என்ற கேள்விக்கு இத்தகைய நபர்களின் சிறுகுழு உயிர் கொடுத்துக் கொண்டிருக்கும் என்று தோன்றுகிறது. ஆனால் யாழ் றோமன் கத்தோலிக்க திருச்சபையின் மேற்றிராணியார் அதி வணக்கத்திற்குரிய தியோகுப்பிள்ளை போன்றவர்கள்கூட மௌனத்தைக் கடைப்பிடிக்கும் இன்றைய சூழலில் மேலே குறிப்பிட்ட சிறு குழுவினரின் குரல் மெலிந்து போய்த்தான் ஒலிக்கிறது.

"இந்தியாவோ யாரோதான் இக் கொலையைச் செய்திருக்க வேண்டும் என்கிறார்கள். ராஜனி எதையும் ஒளிவுமறைவு இல்லாமல் மனதில் பட்டதைத் தைரியமாய் சொல்கிற பெண். இதைப்பற்றி முறைப்பாடு செய்வதில் ஒரு பிரயோசனமும் இல்லை. அதனால் ஒன்றும் ஆகப் போவதில்லை. இது சனங்களுக்கும் தெரியும்' என்கிறார் ஒன்றரை லட்சம் மக்களின் ஆத்மீக மேய்ப்பாளரான அதி வண. தியோகுப்பிள்ளை அவர்கள்.


ஆனால் அவருடைய சொந்த அபிப்பிராயம்தான் என்ன? "எனக்கு ஒரு அபிப்பிராயமும் இல்லை. எந்த அபிப்பிராயமும் இல்லாமல் இருப்பதே நல்லது. நீங்கள் தேநீரைக் குடியுங்கள். ஆறிவிடப் போகிறது" என்கிறார் அதி வண. தியோகுப்பிள்ளை அவர்கள்.

இருள் பரவியதும் கனத்த - அளவில்லாத பூட்ஸ்களோடும், இராணுவக் களைப்போடும் சிறுவர்கள் மட்டுமே வீதிகளில் இறங்கத் துணிகிறார்கள். இடுப்புகளைச் சுற்றி 'கிறணேட்'டுகளைக் கட்டிக் கொண்டும், மெலிந்த கரங்களில் கனத்த 'ரைபிள்'களைத் தூக்கிய வண்ணமும் இவர்கள் 'தமிழீழ விடுதலைப் புலிகள்' என்னும் மகுடியின் பின்னால் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

இந்தப் புரட்சி செய்ததெல்லாம் ஒவ்வொரு பையனுடைய கழுத்தைச் சுற்றியும் ஒரு சயனைட் குப்பியைக் கட்டித் தூக்கியதுதான். இந்த விடுதலை யுத்தத்தால் காட்டமுடிந்ததெல்லாம் சுவரொட்டியில் காணப்படும் அந்த இளம்பெண் ஒரு எதிரி என்பதைத்தானா?

---

மகாகவியின் குறும்பா



பாரி என்ற பாரிய ப ணத்தர்
பண்புடைய மெல்லிய உ ளத்தர்
ஊரில் ஒரு தந்தி மரத்து
ஓர் தளிரும் காணாராய்,
வேரினிலே வார்ப்பித்தார் அத்தர்.

---

வெட்டிப்பேச்சு வீரர்கள்!

-சி.சிவசேகரம்

நன்றி: அலை

*காற்றுக் களைப்புடனே கொட்டாவி விட்டபடி-*
*நெட்டைப் பனைவிரலை நெட்டி முறித்தபடி-*
*சில்வண்டு சூள்கொட்டிச் சலிப்பை உரைத்தபடி-*
*திண்ணையிலே பாய்விரித்துத் தெருவோரம் உட்கார்ந்து*
*அண்டை அயல்முதலாய் அந்தரத்து வெளிவரையும்*
*அலசிப் புதினமெதும் இல்லாக்கால் உண்டாக்கிக்*
*கண்டதுபோற் கதைபேசிக் கால்நாளைத் தின்றபடி-*
*விண் தொலைவின் வெற்றிடமும் பெருமூச்சு விட்டபடி!*

---

"எங்கெல்லாம் பூர்ஷ்வா வர்க்கத்தின் கை ஓங்கிற்றோ அங்கெல்லாம் அம்மணமான சுயநலத்தைத் தவிர, மனிதனுக்கும் மனிதனுக்குமிடையே வேறு எந்த உறவும் இல்லாமல் அது செய்து விட்டது. சமய உணர்ச்சிவேகம், வீராவேசம், பிலிஸ்டைன்களின் உளநெகிழ்ச்சி ஆகியவற்றுல் ஏற்படும் மிகத் தெய்வீகமான ஆனந்த பரவச உணர்ச்சிகளைத் தன்னலமயமான கணக்கீடு என்னும் உறைபனி நீரில் அது மூழ்கடித்து விட்டது. அது மனிதனின் மேன்மையைப் பரிவர்த்தனை மதிப்பாகப் பாகுபடுத்தி விட்டது. எண்ணிலடங்காதவையாக விருந்த, அகற்றமுடியாத, சாஸனப்படுத்தப்பட்ட சுதந்திரங்களுக்குப் பதிலாக வர்த்தக சுதந்திரம் என்ற, பிறரைப்பற்றி அக்கறைகொள்ளாத ஒரே சுதந்திரத்தை பூர்ஷ்வா வர்க்கம் ஏற்படுத்திவிட்டது.

அதுவரை நன்மதிப்புக்கும் பயபக்திக்கும் பாத்திரமாகவிருந்த எல்லா அலுவல்களினதும் மகிமையைப் பூர்ஷ்வா வர்க்கம் அகற்றிவிட்டது. அது மருத்துவரையும், வக்கீலையும், மதகுருவையும், கவிஞனையும், விஞ்ஞானியையும் தன்னிடம் கூலிபெறும் உழைப்பாளிகளாகச் செய்துவிட்டது. பூர்ஷ்வா வர்க்கம் குடும்பத்தின் உளநெகிழ்ச்சித் திரைகளைக் கிழித்தெறிந்து விட்டது; குடும்ப உறவை வெறும் பணஉறவாக்கி விட்டது."

*-மார்க்ஸ் -எங்கெல்ஸ்*
*(கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை)*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தொப்பி சப்பாத்துச் சிசு

சோலைக் கிளி.

தொப்பி
காற்சட்டை சப்பாத்து
இடுப்பில் ஒரு கத்தி
மீசை
அனைத்தோடும் பிள்ளைகள் கருப்பைக்குள் இருந்து
குதிக்கின்ற ஒரு காலம் வரும்.

அந்த
தொப்பி சப்பாத்துச் சிசுக்களின் காலத்தில்
பயிர்பச்சைகூட இப்படியாய் இருக்காது.
எல்லாம்
தருணத்தில் ஒத்தோடும்.

சோளம் மீசையுடன் நிற்காது.
மனிதனைச் சுட்டுப் புழுப்போல குவிக்கின்ற
துவக்கை ஓலைக்குள் மறைத்துவைத்து ஈனும்.

வெள்ளை சிவப்பு
இளநீலம் மஞ்சள்
என்று கண்ணுக்கு குளிர்த்தியினைத் தருகின்ற
பூமரங்கள் கூட
சமயத்திற் கொத்தால்போல் துப்பாக்கிச் சன்னத்தை
அரும்பி அரும்பி
வாசலெல்லாம் சும்மா தேவையின்றிச் சொரியும்.

குண்டு குலையாமல் தென்னைகளில் தொங்கும்.
இளநீர் எதற்கு?
மனிதக் குருதியிலே தாகத்தை தணிக்கின்ற
தலைமுறைக்குள் சீவிக்கும்,
கொய்யா முள்ளாத்தை
எலுமிச்சை அத்தனையும்
நீருறுஞ்சி இப்போது காய்க்கின்ற பச்சைக்காய்
இரத்தம் உறுஞ்சும். அந்நேரம் காய்க்காது.

வற்றாளைக் கொடி நட்டால்
அதில் விளையும் நிலக்கண்ணி.
வெண்டி வரைப்பீக்கை
நிலக்கடலை தக்காளி
எல்லா உருப்படியும் சதை கொட்டை இல்லாமல்.

முகர்ந்தால் இறக்கும்
நச்சுப்பொருளாக
எடுத்தால் அதிரும்
தெருக்குண்டு வடிவாக
உண்டாகிப் பிணமுண்ணும் பேய்யுகத்தை வழிநடத்த.....
உள்ளியும் உலுவாவும்* சமைத்துண்டு ருசிபார்க்கும்
மனிதர் எவரிருப்பர்?
கடுகு பொரித்த வாசம்தான் கிளம்புதற்கும்
ஆட்கள் அன்றிருக்கார்!

இவர்கள்
பொக்கணிக் கொடியோடு பிறந்த ஒருவகைப்
புராதன மனிதர்களாய் போவர்.

20-10-1986

*உலுவா:- வெந்தயம்
நன்றி: எட்டாவது நரகம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சென்று திரும்பல்

கோகுலன்.

வீடு, சோர்ந்து உறங்குகின்ற நீர்யானை போல செழிப்பழிந்த பிரமாண்டத்துடன், நிசப்தமொன்றையே அணிகலனுக்கியிருந்தது. முற்றத்து மல்லிகை, நந்தியாவட்டை, குட்டைகுட்டையாய் வண்ணம் ஜொலிக்கின்ற குரோட்டன்கள் எல்லாம் அதேயிடத்தில் வனப்பிழந்து வீசும் காற்றுக்கேற்ப மெலிதாக ஆட்டம் காட்டின. "அம்மா........." கொஞ்சம் உரக்கவே கூப்பிட்டேன். கொஞ்சம் இடைவெளிவிட்டு இன்னொருதரம், "அம்மா", என்றழைத்துவிட்டு மெதுவாக மல்லிகைப் பந்தலின் தூணோடு சாய்ந்து கொண்டேன். வீட்டின் பின்புறத்தைச் சுற்றிக்கொண்டு வருகையிலே அம்மாவின் நடையில், தோற்றத்தில் நடுத்தர வயதின் சாயல்கள் பிரியாவிடை பெற்றுக் கொள்வது புரிந்தது. கிட்ட வந்ததுமே அம்மா ஆச்சர்யத்தின் விளிம்பில் வாழத்தொடங்கினுர். தளுதளுத்த குரலில் கண்கள் கலங்க "எப்படியும் நீ வருவாய்...... எத்தனைபேர் எத்தனை கதைகளைச் சொன்னுலும்...." அம்மா மேலும் நிலைகலங்க, "சரி சரி தேத்தண்ணி எங்கே?" என்ற உரிமைக் கட்டளையாலேயே உணர்வுகளை வென்று சகஜ பாவத்தை நிலைநாட்ட முடிந்தது. பட்டுக் குஞ்சம் போலப் பளபளப்பும் மினுமினுப்பும் கொண்டிருந்த சின்னத்தம்பிக்கு வானத்தில் செல்லுகின்ற ஏதோவோர் விமானம் அண்ணனைச் சுமந்துவரும் என்ற நம்பிக்கை உறுதியான சந்தோஷம். நான் வீட்டைவிட்டு மேற்படிப்புக்கென்று பயணமான போது சிறு மழலையா யிருந்தவன், இப்போ மலங்க மலங்க விழித்தபடி தூர நின்ருன். கொஞ்சம் கொஞ்சமாக நெருங்கி வந்து இவ்வளவு நாளும் வீட்டாரின் உரையாடல்களில் குழப்பமான உருவாயிருந்த அண்ணனை ஏறிட்டுப் பின் கழுத்தைக் கட்டிக் கொண்டான்.

எனக்கு அழவேண்டும் போலிருந்தது. இத்தனை நெகிழ்வை, இவ்வரிய உடமைகளை, எங்களிலொருவன் எனுமொரு உணர்வுடன் வாரியணைத்துக் கொள்ளும் இவர்களை எப்படி நான்கு வருடங்கள் சந்திக்காதிருக்க என்னுல் முடிந்தது! விருந்தையின் சுவர்களை ஏறிட்டேன். சுவரில் குண்டு துளைத்திருந்த அடையாளம் தெரிந்தது. நான் திரும்பி விட்டேன். வீட்டாரின் எச்ச சொச்ச நம்பிக்கை, அல்லது நப்பாசை காப்பாற்றப் பட்டு விட்டது. சென்று திரும்பா எத்தனை மைந்தர்கள்? ..... எத்தனை உறவுகள்? யார்யார் உள்ளனர்? ..... உள்ளாரெனினும் எங்கு தானுள்ளனர்? ..... எங்கெல்லாம் சிதறிவிட்டனர்! ..... எத்தனை பெரிய விலை இது! கிடைத்ததெல்லாம் என்ன? என்னதான் கிடைத்துவிட்டது?

பயணக் களைப்பு மேலும் அதிகரிப்பதை என்னுல் உணரமுடிந்தது. நாற்காலியில் உட்கார்ந்த படிக்கு தோற்பையைத் திறந்து தம்பிகளுக்கென வாங்கி வந்தவற்றை விநியோகித்துக் கொண்டிருக்க அம்மா தேநீருடன் உள் நுழைந்தார். "நடந்து முடிஞ்சதெல்லாம், நானனுபவிச்ச கஷ்டமெல்லாம் என்ரை எதிரிக்குக்கூட நடக்கக் கூடாது. கடவுளே! ..... கடவுள்தான் காப்பாற்றினவர். சிலோன் ஆமியும் அநியாயம் செய்தவன்தான். வடமராட்சியிலும் சரி ..... மாவிட்டபுரம் தச்சங்காட்டு ரோட்டிலேயும் சரி ..... அடிச்சு வீடுகளையெல்லாம் இறக்கிக் கொட்டினவன்தான். இந்தியன் ஆமியோ அதையும் செய்து, கொள்ளையுமடிச்சு போதாதற்கு எங்களையெல்லாம் படுத்திவிட்ட பாடு ..... அலைஞ்ச அலைச்சல் ..... அதுவும் ஒரு நாள் ..... நீ காட்டின வழியில உனக்கடுத்தவை இரண்டும் புலியெண்டு போட்டினம். உனக்கடுத்த குரங்கு சென்ட்ரியாம். உதயன் பிள்ளை இயக்கத்தினற்ரை தயாரிப்புகள் ..... அப்பளம், தும்புக்கட்டை வியாபாரம் ..... இந்தியன் ஆமி ஷெல்லடி தொடங்கி விட்டான். இதிலும்கூட அவன் சிலோன் ஆமியைப் போல இருநூறு மடங்கு ..... என்ரை ஐயோ ..... மழை பொழிஞ்ச மாதிரி ..... குமாரன் கடைசித் தம்பியையும் கூட்டிக் கொண்டு அப்பர் வீட்டை போயிட்டான். எனக்கு என்ன செய்யிறதெண்டே தெரியல்லை. சிலோன் ஆமி பரவாயில்லை. பக்க வீட்டுச் செல்லம்மாவின்ரை கடைசிப் பெட்டை ..... அடி வயித்திலேயும் துடையிலேயும் ஷெல்பட்டு ..... அப்பா ..... இரத்த விளாறு ..... ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போக என்ன வழி! அவள் கதறி விட்ட கதறல் ..... அதைக் கேட்டாலே நடுங்கும் ..... ஐயோ அவங்கடை ஷெல்லொண்டு வந்தாக் காணும் ..... என்ன மந்திரமோ மாயமோ மூண்டு இடத்தில கொஞ்சம் கொஞ்சமா வெடிக்கும். இண்டைக்கும் தாய் செல்லத்துக்கு விசர் மாதிரித்தான்."

அம்மா தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தார். பக்க வீட்டுச் செல்லம்மாவின் பையனுக நான் மாறி ஆஸ்பத்திரியொன்றின் நீண்ட வராந்தாவில் நடந்து கொண்டிருக்கிறேன். விழிகள் வார்ட் டுகளை வெறிக்கின்றன. கண்டுபிடித்து கட்டில்களை ஆராய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அம்மா ..... என்னுடைய அம்மா ..... சலனமற்ற விழிகளுடன் ..... எனது பிள்ளை எங்கே ..... பாவிகள் கொன்று விட்டார்கள் ..... கண்ணீர் ..... தவிப்பு ..... அம்மா ..... மறுபுறம் தலையைத் திருப்பி நாற்காலியில் உட்கார்ந்தபடியே தூங்க முயற்சிக்க குண்டடிபட்ட இரத்த விளாறுடன் குழந்தையொன்று மெல்லமெல்ல செயலிழக்க கையாலாகாதவனாய் நான் தவிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தேன்.

ஊருக்கு வந்து இரண்டு கிழமைகள் ஆகிவிட்டிருந்தது. கொஞ்சம் தைரியமாக, தனியாகவே ஊரை வலம் வரத் தொடங்கிய நாட்கள். ஆனால் வீட்டைவிட்டுக் கிளம்புகையில் அடையாள அட்டை, மற்றும் பாஸ்போட் உள்ளதா என்பதைச் சோதித்த பின்னரே அம்மாவின் அநுமதி கிடைக்கும். தெருவில் செல்கையில் எதிர்ப்படும் நண்பர்கள், உறவினர் பேசிக்கொண்டதும், "சந்தியில ஆமி" எனும் வகையிலான எச்சரிப்புகளும் சந்தோஷம் தந்தன. எரிச்சல், கோபம், பயம் என்று நானாவித உணர்வுகளும் அமைதிப்படை ரோந்து வருகையிலும், சந்திகளில் "செக்கிங்" என்று தாண்டவமாடுகையிலும் ஏற்படும். சந்திகளில் இருக்கும் வீடுகளில் சில ஆக்கிரமிக்கப்பட்டு அவை முகாம்களாக மாற்றப்பட்டிருந்தன. அத்தகைய முகாம்களின் முனைகளில் காவற்கூண்டுகள் செங்கற்கள், பனைமரம் போன்ற இன்னோரன்ன பொருட்களைக் கொண்டு கட்டப்பட்டிருந்தன. ஒவ்வொரு ஊரிலும் குறைந்தது மூன்று முனைகளிலும் முகாமிருந்தது. பெரிய சாலைகளில் ஐந்து நிமிடத்திற்கொரு தடவை அமைதிப்படை வாகனங்கள் வலம் வரும். சிறு ஒழுங்கைகளில் தகவல் தொடர்புச் சாதனங்களுடன் பத்துப்பேர் கொண்ட குழுவொன்று வரிசை தவறாது ஊர்வலமாக அடிக்கொரு தரம் ரோந்து செல்லும்.

வீட்டாருக்கு இப்போதாவது படிக்கிறானே எனும் வகையில் சந்தோஷம். "கடந்த காலத்தின் இருண்ட நாட்களில் நீங்கள் செய்ததை எப்படித் தவறெனக் கொள்வது" என்று சமாதானம் கொண்டனர் போலும். "இனிமேலாவது மனிசராக முயற்சியுங்கள். இவையெல்லாம் பேய் வேலை" என்பது அம்மாவின் திருவாசகமாக இருந்தது. அப்பாவுக்கோ தனது முப்பதாண்டைய அரச சேவையினூடான அநுபவங்கள் எதிரிகளை இனம்காண வைத்தது. வீழ்ந்து போன வாழ்நிலை, இந்நிலையைச் சமாளிக்க வக்கற்ற அரசு, எத்துணை கொடூரமாக எங்களை நசுக்கியது! இத்தனைக்கும் மேலாக எவ்வளவு பெரிய கபளீகரப் பேர்வழியை நண்பனாக நம்பி ஏமாந்தோம்! போன்ற விடயங்களை அவரால் உணர முடிந்ததை பேச்சுக்கள் வெளிப்படுத்தியது. அவரும்கூட தந்தை எனும் நிலையிலிருந்து, "இனிமேல் வெறுமனே ஆயுதம் ஏந்துதல் மடத்தனம்" என்றே உச்சரித்தார். இன்னமும் புதிதாயொரு இந்திரன் தோன்றித் தீர்வினை வழங்கானோ? என்றே ஏங்கிக் கொண்டிருந்தார். இவ்வகை ஏக்கமும், அரசுகள் வழங்குவோமெனச் சொன்ன அமைதியையும், அதனூடான வாழ்க்கை ஒழுங்கையும் தேடும் அங்கலாய்ப்பும் ஏக்கமும் அரச சேவையாளரிடமே அதிகமிருந்தது.

நெரிசல் மிகுந்த காங்கேசன் துறை வீதி வழியாக அப்பாவும் நானும் சைக்கிளில் போய்க் கொண்டிருந்தோம். 1983களில் எனது குடும்பமும் சரி, நெருங்கிய உறவினர்களும் சரி, என் அரசியல் நடவடிக்கைகளுக்காய் நடுநடுங்கி, அப்பாவின் என்னை "நாடுகடத்தும் தீர்மானத்திற்கு" ஏகோபித்த நல்லாதரவை வழங்கினர். அந்நேரம், இன்று நாங்கள் சந்திக்கச் சென்று கொண்டிருக்கும் என் ஒன்றுவிட்ட அண்ணன் சத்தியன் ஒரு அசல் தோட்டக்காரனாக வாழ்ந்து கொண்டிருந்தான். பள்ளிக்கூடம் போவதை விடவும் விளைபொருட்களோடு சந்தை சென்று வருவது எவ்வளவு இலாபகரமானது என்பது அவனது தத்துவம். என்னைவிட ஓரிரு வயதுகள் பெரியவன். அப்பாவின் அண்ணரான பெரியப்பாவின் கடைசி மகன். அவனைச் சந்திக்க நான் போய்க் கொண்டிருந்தேன். சிறை முகாமில் எனது பாதுகாப்பை உறுதி செய்ய நடுத்தர வயதுகளைத் தாண்டிவிட்ட எனது தந்தை கூட வருகிறார். யாருக்கு யார் துணை வேண்டும்? ..... கைவிடப்பட்ட முன்னாள் அரசமருத்துவமனைக் கட்டிடமே அமைதி காப்பவரின் சிறைக் கொட்டடியாக மாறியிருந்தது. சீமெந்துத் தொழிற்சாலையின் புகையாலும் கடற்கரையோரமாக செயற்கைத் துறைமுகம் நிர்மாணிக்கப்பட்டு வருவதனாலும் புகை சூழ்ந்த செம்மண் முகமெறியும் வனமாகி அசுத்தப்பகுதி என்ற கிரீடத்தைச் சுற்றுவட்டாரம் சூடியிருந்தது.

"மக்கள் தொடர்பு அதிகாரி" என்று ஓர் அறையின் வாயிலில் எழுதப்பட்டிருந்தது. முன்னாள் ஒரு நீள வராந்தா. அதில் நூற்றுக்கு மேற்பட்ட பல்வேறு பிராயத்தினரும் எம்மைப்

மகாகவியின் குறும்பா.



*சிவபெருமான் இந்நிலத்தில் வந்தார்.*
*சில்லாலைப் பக்கம் நடந்தார்.*
*அவர் உடை கண்டால் விடுமா*
*அவ்விடத்து நாய்? அப்பன்*
*அவசரமாய்த் தம்விடை இவர்ந்தார்.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போலவே சாப்பாட்டுக் கூடைகளைக் காவிக் கொண்டிருந்தனர். எல்லோரினதும் பொது அம்சமாக இன்னுமோர் விடயமும் இருந்தது. ஒரு வகை மௌனம். அப்பாவின் நண்பரொருவரும் மகனைப் பார்ப்பதற்காக அங்கு காத்துக் கொண்டிருந்தார். அவரது பையனை "A காம்ப்" இல் வைத்துள்ளனராம். A,B,C,D என முகாம்கள் நான்கு வகையாம். எனது அண்ணன் D காம்ப் இல் உள்ளதால் முயற்சிப்பின் ஆளை வெளியில் எடுக்கலாமென்றார். A இல் இருப்பவர்களுக்காக முயற்சிப்பது சுவரில் மோதுவதற்கு ஒப்பானதொன்றும். எனது பக்கத்து ஊரைச் சார்ந்த ஒரு நடுத்தர வயது கொண்ட பெண்மணி பாக்கு வெற்றிலைச் சாற்றை உமிழ்ந்து விட்டுச் சொன்னர். "என்ரை பெடி பாவம் வெளியிலிருந்தா இப்ப O/L சோதினையாவது எழுதியிருப்பான். உந்த அறுவார் போறபோது திறந்து விட்டால் தானுண்டு", என்ருர். ஆட்களைச் சந்திப்பதற்கே நிறைய விதிமுறைகளிருந்தன. ஒரு கிழமையில் யாராவது இரண்டே இரண்டு உறவினர் மட்டுமே பார்வையிடலாம். இதனை மீறி தவிப்புடன் வருபவர்கள் விரட்டப்பட்டனர். ஒரு தாயாரும் இவ்வாறு விரட்டப்பட்டார். "இல்லையில்லை இதுதான் நான் இந்தக் கிழமை முதல்தரம் வாறன்." சரியான பதிலற்றுப் பின்னர் ஒரு அதிகாரி மிடுக்காக, "உனது மகன் இங்கில்லை", என அறிவித்தார். பின் தாயாருக்காக பிரசைகள் குழுத்தலைவர் ஆஜராகி வந்து பதில் சொன்னர். அந்த இளைஞனை மேலதிக விசாரணைகளுக்காக பலாலி இராணுவ முகாமிற்கு அழைத்துச் சென்று விட்டனராம். இரு கிழமைகளுக்குப் பின்னரே இங்கு கொண்டு வருவார்களாம். பக்கத்திலிருந்தவர், "அது சரி, மேலதிக அடி உதை- ஒரு கிழமை ..... காயத்தோட தாய் தகப்பன் பார்த்தா நன் மதிப்பு என்னுவது? அதுக்காக ஒரு கிழமை" என்று முணுமுணுத்தார். எழுத்து மூலமான விண்ணப்பம் தாண்டி, எனது முகமீது கொண்ட காதலால் அமைதிப்படை அதிகாரி விசாரணையைத் தொடங்கினர். அப்பாவின் அரச சேவகமும் எனது சென்னைக் கல்லூரி அடையாள அட்டையும் காப்பாற்ற, அநுமதி கிடைக்கப் பெற்றவராய் அடுத்த தங்குமிடத்துக்கு ஒரு குழுவோடு அனுப்பி வைக்கப் பட்டோம். அங்கு பாதுகாப்பு மற்றும் இன்னேரன்ன சோதனைகட்காக (சாப்பாடு கிளறல், குழம்புப் போத்தலைக் குலுக்குதல்) ஒரு மணித்தியாலம் தாமதிக்கப்பட்டோம். அப்போது ஆமிக்காரர் கிளாஸ்களில் தண்ணீரை ட்ரேயொன்றில் வைத்து பவ்வியமாக அனைவர்க்கும் வழங்கினர். "முந்தியெல்லாம் சோடா குடுப்பாங்களடாப்பா ..... நல்லெண்ணம் வளர ..... இனி வளராதெண்டு தெரிஞ்சதாலேயோ என்னவோ இனிமேல் இதுதான்", அப்பா மெலிதாகச் சிரித்தபடி கூறினர்.

## தலைப்பிடப்படாத ஒரு கவிதை

—சி.சிவரமணி—

என்னிடம்
ஒரு துண்டுப் பிரசுரத்தைப் போல்
நம்பிக்கையும் முடிவும் சொல்லக்கூடிய
வார்த்தைகள் இல்லை.

இரவு,
இரவினல் அதிகாரமிடப்பட்ட பகல்
நாளை காலையில்
சூரியன் உதிக்குமா என்பதில் கூட
சந்தேகம் கொண்டுள்ள என்னிடம்
கனவுகள்
தம் அர்த்தத்தை இழந்தவைதான்.

இந்தச் சமூகத்தின் தொப்புள் கொடிக்கு
துப்பாக்கி நீட்டப்படும் போது
ஒரு மெல்லிய பூ நுனியில்
உட்காரக் கூடிய
வண்ணத்துப் பூச்சியின் கனவு
எனக்கு சம்பந்தமற்ற
ஒரு சம்பவிப்பு மட்டுமே.

நான் மனிதனாய் வாழும் முயற்சியில்
பூக்களை மரத்துடன் விட்டுவிட விரும்புகிறேன்.
எனக்கு பகலாக உருவமைக்கப்பட்ட அழகிய இரவு
கனவாய் உள்ளது.

நன்றி : திசை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மழிக்கப்படாத முகத்துடனும், சுத்தம் செய்யப்படாத தலையுடனும் அண்ணன் வந்து பேசிக் கொண்டிருந்தார். ஆளைப் பார்க்கப் பார்க்க பிரான்ஸிலிருந்து பெரியண்ணர் அடிக்கடி டெலிபோனில் சொல்லும் வாசகங்கள் நினைவில்வந்து மோதியது. "எப்படியாவது தம்பியை வெளியில் எடுத்துவிடு. அங்கே ஆளை வைச்சிருக்கப் பிரச்சனையெண்டால் உன்னோடை கூட்டி வந்து இந்தியாவில வைச்சிரு". சம்பாஷணையில் நான் சலித்துப் போனேன். அண்ணர் தன் அடையாள அட்டையைக்கூட தொலைத்திருந்தார். அதுபற்றிப் பெரிய கவலையேதுமின்றி, "வெளியில வந்துதான் என்ன கிழிக்கிறது. என்னல் வெளியில போகேலாது", என்ருர். சற்று நேரத்தைய மௌனம் விலக அப்பர் பரிவுடன் அவனது உடல்நிலைபற்றி விசாரித்துக் கொண்டார். சாப்பாட்டுப் பொட்டலங்கள், தோய்க்கப்பட்ட உடுப்புகள் கைமாறின. உடுப்பு தோய்ப்பதற்குத் தண்ணீர் கொடுக்க மாட்டார்களாம். குளிப்பதற்கு ஏதோ கொஞ்சம் தண்ணீர் காட்டப்படுமாம். சலுகை ஏதாவது வேண்டுமாயின் நாம் கொண்டுபோய் இவர்களுக்கெனக் கொடுக்கும் சிகரெட்டுகள் அவற்றைச் சாதிக்கும் வல்லமையைப் பெற்றிருந்தன.

இவ்வாருன சூழ்நிலையில் என் அண்ணன் சிறைவைக்கப் பட்டிருந்தார். எனது அண்ணனும், பால்யகால நண்பனுமான - அந்த அசல் செம்பாட்டு மண்ணின் பிரதிநிதி - இன்று ஒரு பயிற்சி பெற்ற புலி. அவரைச் சுதந்திரமாக உலவவிடும் பட்சத்தில் அமைதிக்குக் குந்தகம் விளைவிக்கக் கூடியவர். திருவிழாக் காலங்களில் அண்ணனின் சேமிப்புப் பணம் மொத்தமாக வெளிவர, தானெரு காசாளர் போல் அவர் பின்வர, ஒன்றுக்கு நாலு எனுமொருவகைச் சூதாட்டத்தால் அண்ணன் கைக்காசில் காற்பங்கை இழந்து, நண்பர் குழுவோடிணைந்து மிகுதிப் பணத்தையும் செலவழித்தபின், சேட்டுக்களைக் கழட்டி தலைக்கு வைத்துக்கொண்டு தேர்முட்டியில் உறங்கிய காலங்கள் நினைவுவரக் கண்கள் பனித்தன. அண்ணர் சொன்னர், "அடுத்தமுறை என்ரை அம்மாவோட வா. வரும்போது வடைகட்டி எடுத்துவரச் சொல்லு. போனமுறை மாதிரி இல்லாமல் கொஞ்சம் அதிகமாய் - அப்பதான் எல்லோருக்கும் கொடுத்துச் சாப்பிடலாம்". மீண்டும் மௌனம் நிலவியது. அமைதி காப்பவர் நேரம் முடிந்து விட்டதை நினைவு படுத்த - என்னைப் பார்த்து, "நீ ..... முயற்சித்துப் பார் ..... வெளியில வந்தும் ..... இந்த அடி வேண்டின பிறகு ..... வெளிநாட்டுக்கு யார் போறது ..... ", என்றவாறே அண்ணன் எமைப் பிரிந்து நடந்தார். அப்பா சற்று நேரம் அவர் போவதையே பார்த்தபடி நின்ருர்.

மேலும் சில தினங்கள் கழிந்தன. அண்ணருடைய விடுதலையும், மீண்டும் இந்தியா திரும்புகையில் அவரையும் உடனழைத்துச் செல்ல வேண்டுமென்பதுவும் ஓயாத அலைச்சலுக்குத் தூண்டுகோலாகின. ஒரு வழியாக ஆங்கிலத்தில் தட்டெழுத்துச் செய்யப்பட்ட விடுதலை கோரும் விண்ணப்பத்துடன் சிறைமுகாம் தலைமை அதிகாரியைச் சந்திக்கச் சென்றேன். கூடவே பெரியப்பாவும் வந்திருந்தார். இதற்கு முன்னரும் இரண்டு மூன்று எழுத்து மூலமான விண்ணப்பங்களைப் பெரியப்பா சமர்ப்பித்திருக்கிருர். விண்ணப்பத்தில் அண்ணரது குடும்ப நிலவரம் அவரில்லாது குடும்ப ஜீவனப்பாட்டை உறுதி செய்யும் விவசாயம் கைவிடப்பட்டிருப்பது, தாயார் நோய் வாய்ப்பட்டிருப்பது, அவரை விடுதலை செய்யும் பட்சத்தில் எமது குடும்பமே எத்தனை கிலோகிராம் நன்றிக் கடனுடையவராய் மாறுகின்றது போன்ற இன்னோரன்ன விடயங்கள் அடங்கப் பெற்று கீழே பிரசைகள் குழுவினர் சிபார்சுக் கையொப்பம் இட்டிருந்தனர். இராணுவ மேலதிகாரியின் முகத்தில் மாபெரிய கடமைக் கனல் சூழ்ந்திருக்க தொலைபேசியில் தீவிரமாக உரையாடிக் கொண்டிருந்தார். சற்று நேரத்தின் பின்னல் எம்மை உட்கார வைத்துப் பேசத் தொடங்கினர். அவர் ஒரு கம்பீரமான வடக்கிந்திய இராணுவ அதிகாரிக்கு மாதிரிப் பொருளாக இருந்தார். அழகான உச்சரிப்பில் ஆங்கிலம் பேசவேண்டு மென்பதில் மிகவும் கவனமாயிருந்தார். கூடவேயிருந்த மலபார் ரெஜிமென்ட் அதிகாரி அவரின் பேச்சின் சராம்சத்தைத் தமிழிலும் நீட்டி முழக்கினர். இவ்வாருன வெத்துவேட்டுக்கள் நிறையப்பெற்ற அவரின் பேச்சின் சராம்ச மென்னவோ குறைவுதான்.

"புலிகளின் தொல்லை மிகவும் மோசமாயுள்ளது. ஆனலும் இவரை விடுதலை செய்துவிடலாம். முதற்படியாக ஏதாவதொரு ஆயுதம் ஒப்படைக்கப் படவேண்டும். பின் விடுதலைக்கு விலையாக தானகவே தேசப்பிரஷ்டத்தைக் கைதி மேற்கொள்ளல் அவசியம்". ஆயுதத்திற்கு நாம் எங்கு போவது? இதுவெல்லாம் தேவையில்லை. ஒரு இருபதினயிரம் வரைசெலவழித்து கொழும்பிலுள்ள இந்தியத் தூதரக அதிகாரி ஒருவரிடமிருந்து சிபார்சுக் கடிதம் பெற்றுவரின் விடுதலை நிச்சயமென்று வெளியில் உலவும் வதந்தி ஞாபகம் வந்தது.

வெளியில் வந்தபோது பெரியப்பா நிறையவே சோர்ந்து போயிருந்தார். கொஞ்சம் சதைப்பற்றுன தொந்தி விழுந்த உருவம். தலையில் வழுக்கை விழுந்திருப்பினும் வெண்முடிகள் எண்ணக்கூடக் கிடையாது. எண்ணெய் தேய்த்து வாரப்பட்ட தலை. வெள்ளை வேட்டிசால்வை அணிந்த கம்பீரப் பிரகிருதி. இவரது இளமைக்கும் ஊரின் தேசிய பானமாம் கள்ளுக்கும் நெருங்கிய உறவுண்டு என்று என் வீட்டார் பேசிக்கொள்வர். அவர் பேச்சிலும் இது போதையல்ல,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'புத்திஜீவி வகுப்பிலிருந்து வரும் எமது எழுத்தாளர்களும் கலைஞர்களும் தமது படைப்புக்கள் பொதுமக்களால் நன்கு வரவேற்கப் படவேண்டுமென விரும்பினால், அவர்கள் தங்கள் சிந்தனையையும் தங்கள் உணர்ச்சிகளையும் மாற்றிக் கொள்ளவும் புதிய அச்சில் வார்த்தெடுக்கவும் வேண்டும். இத்தகைய ஒரு மாற்றம் இல்லாமல், இத்தகைய புதிய அச்சில் வார்த்தெடுத்தல் இல்லாமல் அவர்களால் எதையும் நன்கு செய்ய இயலாது. அவர்கள் பொருந்தாத நபர்களாக இருப்பர்.


— மாவோ —

ஆரோக்கிய பானம்தான் என்ற நம்பிக்கை மிளிரும். ஓய்வுபெற்ற விமானப் படைச் சிற்றூழியர். விமானப்படை தந்த மிடுக்கில் அந்நாளில் செய்த சண்டித்தனத்தின் சான்ருக அரைக் காற்சட்டைப் போலீசிடமிருந்து பிடுங்கியெடுத்த சிறு குண்டாந்தடி பெரியப்பாவின் வாசஸ்தலத்தின் அலங்காரச் சின்னங்களில் முதன்மையானது. இவ்வகைப் பட்ட எனது பெரிய தந்தையார் இன்று புயலடிக்கப் பட்ட பஞ்சாக மாறியிருந்தார். இவரது ஈடாட்டமானது வயோதிகத்தால் ஏற்பட்டதொன்று என்பதைவிட இயக்கம்சார் சண்டியர் முன் இவர்களின் வீரம் தோற்ருேடி மறைந்ததென்பதே உண்மையாகும். இவரது உலகஅறிவு "ஒதுங்குவதே மரியாதை" எனப் போதித்தது போலும். முன்பெல்லாம், "பாராளுமன்றம் சென்று பெற்று வருகின்ருேம் சமநீதி", என்று முழங்கிக் காலப்போக்கில் பாராளுமன்ற நாற்காலிகளாலும் தூக்கியெறியப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் தீவிர ஆதரவாளராயிருந்தவர். பழமையின் தொடர்ச்சியாய், ஈழப் போராட்டத்தை, "செஞ்சூரியன்களின் ஒளிக்கதிர்கள் வாழ்க!" என வாழ்த்தியவர். பின் வெறுப்படைந்தோ அல்லது புத்திர பாசம் உச்சம் பெற்றதாலோ என்னவோ, செயல் வீரர்களை வாரியணைத்துக் கொண்டார்.

வீட்டுவாசலை நாங்கள் நெருங்கிய பொழுது எமதூர்ப் பிரமுகர்களி லொருவரான மகாலிங்கம் மாஸ்டர் எதிர்ப்பட்டார். "என்ணுச்சு?" என்று அவர் ஆவலுடன் வினவ சால்வைத் துண்டால் முகத்தைத் துடைத்தபடி பெரியப்பர் சலிப்புடன் செருமிக் கொண்டார். "அப்பவே இந்த விடு பேயன்களுக்குச் சொன்னனுன். இந்தியாவை இவை ஏமாத்தலாமெண்டு நினைச்சது ..... தந்திரோபாயமும் மண்ணுங்கட்டியும் ..... அவன் ஆயுதம் கொடுத்தால் வாங்கின உங்கடை மதி எங்கை? ..... ஊம் .....". மாஸ்டர் ஒரு அந்நாளைய இந்தியப் பட்டதாரியாகையால் இந்தியாவின் பெருமையும், சிறுமையும் அவரின் திறமையென ஆகி வெகுகாலம். இயல்பான உலகறிவும் விவாதத் திறமையும் வாய்க்கப் பெற்றவராகையால், "என் பேச்சைக் கேட்காது இருந்ததால்தான் எல்லாம்" என்ற பாணியில் தனது கட்சியை நிலைநாட்ட ஆரம்பித்தார். நான் குற்றவாளியைப் போல் அவர் முன் தலை குனிந்தபடி நின்று கொண்டிருந்தேன். மகாதேவர் ஓர் இடைவெளியிட்டு சுருட்டிற்கு உயிர்கொடுக்க, பெரியப்பா ஆரம்பித்தார். "என்ரை குரங்குக்கு எத்தனை நாள் சொல்லியிருப்பன் ..... எங்காவது இனிமேலாவது போய்த் தொலையெண்ணக் கேட்டானே ..... முதல்தரம் பிடிபட்டு வந்தவுடனை சொன்னனுன். அம்மா! அண்டைக்கு அவங்கள் அடிச்ச அடி ...." இவ்வாருக அண்ணர் கைதானதை; கைதாகியவுடன் வீட்டு முற்றத்தில் வைத்து அமைதிப் படை விசாரணையென்னும் வடிவில் அடித்து உதைத்ததை; தடுத்துக் கெஞ்சிய பெரியம்மாவுக்கும் அடி விழுந்ததை; அமைதிப் படையின் புலி வேட்டை பற்றி ஒரு விவரணச் சித்திரத்தைத் தந்து கொண்டிருந்தார். பெரும்பாலும் அவரது தொனி,'சண்டையிடல் ஒன்றே தீர்வு, கொஞ்சம் புத்தியைப் பாவித்துச் சண்டை போட்டால் முடியுந்தானே!' என்பதை உட்கிடையாக்கியது. மாஸ்டருக்கோ அவரது அறிவு, மலையோடு மோதுவதும், இந்தியாவோடு மோதுவதும் ஒன்றே என வக்காலத்து வாங்க வைத்தது. அவரும் புலிகளின் தியாகத்தையும், மற்றையோரின் துரோகத்தையும் எள்ளி நகையாடியபின் அரசியல் தீர்வுக்காய் அங்கலாய்த்தார். இன்னமும் கொஞ்சம் கூடுதல் உரிமைகள் வேண்டும். அதிகாரம் யாவும் அநியாயத்தை எதிர்த்து உயிர் தந்தவர்க்கே என்பது அவரின் பிரலாபமாய் இருந்தது. பெரியப்பாவோ மறு முனையிலிருந்தார். திலீபன் அணுஅணுவாய் உயிர்விட ஆக்கிரமிப்பாளர் அநுட்டித்த அலட்சியத்தை நினைவு கூர்ந்தார்.

எல்லாரும் இரட்சிப்பாளரென நம்பி வரவேற்ற பயல்கள் ஆரம்பத்தில் நாமும் இராணுவமே என வெளிப்பட்டு, இல்லையில்லை நாம் மாபெரிய சாத்தான்கள் என்ருடிய நரவேட்டையின் வடுக்களை நினைவு கூர்ந்தார். இவ்வாறு பேசிக் கொண்டிருந்தவர், மாஸ்டர் மீண்டும் அரசியல் தீர்வு, பேச்சு வார்த்தை எனவாரம்பிக்க, "இனியும் பேச்சு வார்த்தையாம்; விடும் மாஸ்டர் உந்தக் கதையை..." என முற்றுப் புள்ளியிட்டார்.

மகாகவியின் குறும்பா



*பெஞ்சனிலே வந்தழகக் கோனார்*
*பெருங்கதிரை மீதமர லானார்*
*அஞ்சாறு நாள் இருந்தார்*
*அடுத்த திங்கள் பின்னேரம்.*
*பஞ்சியினாலே இறந்து போனார்.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவ்வாறுன இருவேறு கருத்துக்களின் ஆதிக்கம் எங்குமிருந்தது. என் பால்ய நண்பனும் பல்கலைக் கழக மாணவனுமான ரவியும் இதனை அடிக்கடி சொல்லிக் கொண்டான். அவனேடு பேசிக்கொண்டிருந்தேன். "எல்லாம் நடந்து முடிந்து விட்டாலும் என்னதான் மாற்றம் நிகழ்ந்து விட்டது?" என்று நான் சலித்துக் கொண்டதற்கு, அவன் சொன்னுன், "சனங்கள் முன்புபோல இப்போது இல்லை. எதிரியை, எதிரியின் பலத்தை, கடந்த தோல்வியின் காரணத்தை அறியும் ஆவலோடுள்ளனர். வாசிப்பு என்பது முன்போல் இப்போ வெறும் பொழுதுபோக்கு விவகாரமல்ல ..... இதுவா மிச்சம் என்று கேளாதே ..... இதுவே பெரிசு" என்ருன். உண்மைதான். மிகக் குறுகிய காலத்திலேயே அமைதி காப்பவர் தம்மைத்தாமே ஆக்கிரமிப்பாளர் என்று தோலுரித்துக் கொண்டனர். சனங்கள் தம் உணர்வுக்கு வடிகாலில்லாத போதுதான் வாழ்வதற்காக சமரசத்தைத் தெரிவு செய்கிருர்கள். நண்பனும் நானும் பனைமரங்கள் அணிவகுத்த அச்சாலை விளிம்பிலுள்ள தேர்முட்டி மறைவிலிருந்து கீழிறங்கினேம். இன்னமும் ஏழு நாட்களில் பயணம் என்பதனை நான் நினைவுகூர அவன் தனது பல்கலைக் கழகம், ' இனி எப்போது திறக்குமோ? திறப்பினும் யார்யாரெல்லாம் அதை நினைத்தவுடன் மூடி வைப்பாரோ?' என்று சிரித்தபடி சொன்னுன். இறுதியில் பல்கலைக் கழகம் திறக்கும் வரை படிப்பதற்காக, "ஏதாவது புத்தகம் வாங்கி அனுப்பிவிடேன்" என்ற விண்ணப்பத்துடன் செல்லும் வழிகுறித்து எச்சரித்து விடை தந்தான்.

வயல்வெளியில் காற்று ஒரு ஊஞ்சலைப் போல் அசைந்து கொண்டிருக்க, புல்லுக் கடகமும், கலப்பைகளும் தலையிலும் தோளிலுமாக மாடுகளை வழி நடத்தி உழைப்பவர் ஓய்வு கொள்ளச் செல்லும் நேரம். இன்னெரு மாலைப்பொழுது எனதூரில் முடிவடைந்து கொண்டிருந்தது. நீரிறைக்கும் மெஷின் சத்தங்கள் ஓய, தூரத்தே புழுதி கிளப்பியபடி ஒரு டிராக்டர் போய்க் கொண்டிருந்தது. வயல்வெளியைத் தாண்டுகையில் சிறு பெண்ணெருத்தி, "அண்ணை! ஆமிக்காரன் சந்தியில செக்கிங்", என எச்சரித்தாள். முன்பெல்லாம் இலங்கை இராணுவத்தை ஏமாற்ற நாம் நடமாடிய ஒழுங்கைகள் வழியே வீடு திரும்பி விடுவோமென முடிவெடுத்திருந்தேன். அம்மா கண்ணுள் வந்தார். "தம்பி! முன்னை மாதிரி ஒழுங்கையெல்லாம் வேண்டாம். அவன் கூர்க்காக்காரன் நாயோட நாயாய் பத்தை பறியெல்லாம் படுத்துக் கிடக்கிருன்". வருவது வரட்டுமென நேராகவே வந்து செக் போஸ்ட் தாண்டி பெரிய ரேட்டில் ஏறியபோது கைதட்டி அதட்டும் கூச்சல் கேட்டது. திரும்பி அழைத்தவரிடமே போக, சைக்கிளை ஓரமாக நிறுத்திவிட்டு வரிசையில் நின்று கொள்ளும்படி கேட்கப் பட்டேன். வரிசையில் எல்லா வயதினரும் நின்று கொண்டிருந்தனர். டியூசன் முடிந்து முன்னரெல்லாம் செல்லக் களைப்புடன் வீடு திரும்பும் இளம் பெண்களும் நடு நடுங்கியபடி நின்றனர். முகம் மறைக்கப் பட்ட "தலையாட்டிகள்" எல்லோரையும் ஏற இறங்கப் பார்த்து அதிருப்தியை தலையாட்டலினூடாக வெளிப் படுத்தினர். இந்தத் தலையாட்டிகள் ஒருவகைத் திரிசங்கு சொர்க்கத்தில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். பெரும்பாலும் துரோக இயக்கங்களின் உறுப்பினரை விடவும், கைதாகி சித்திரவதைக்குட் படுத்தப்படும் போராளிகளே அநேகம் பேர் இவ்வாறு தெருத் தெருவாக முகமூடியிட்டபடி கொண்டு வரப்பட்டனர். ஒருவரையும் காட்டிக் கொடுக்காவிடினும் - சித்திரவதை, அடிக்குப் பயந்து தவருகத் தலையாட்டினுலும் - சித்திரவதைதான் தண்டனையாகுமாம்.

ஒரு இராணுவச் சிப்பாய் எல்லோருடைய அடையாள அட்டைகளையும் பரிசோதித்து விசாரிப்பினை எற்கனவே தொடங்கியிருந்தார். ஒரு பெரியவர் - அவர் அணிந்திருந்த வெள்ளைவேட்டியில் செம்மண் தோய்ந்திருந்தது. வயலில் வேலை முடிந்து வந்ததாலேற்பட்டிருந்த களைப்பும், ஒருவகைச் சிடுசிடுப்பும் அவர் முகத்தில் தெரிந்தது. அவரிடமும் அடையாள அட்டை கேட்கப்பட்டது. அவர் மடியைத் துழாவி அடையாள அட்டையினை எடுத்துக் கொடுத்தார். அடுத்ததாக அவர்கள் கேட்டகேள்வி படையினரின் பெயரை, 'அறியாமை காப்போர்' என மாற்றப் போதுமானது. வேறென்றுமில்லை, அடையாள அட்டையின் இலக்கங்களைச் சொல்லுமாறு பணிக்கப் பெற்ருர். அதில் எத்தனை எண்கள் உள்ளனவென்று ஒரு படித்தவரைக் கேட்டால்கூடத் தெரியாது என்றே பதில்வரும். பத்துக்கு மேற்பட்ட எண்களைக் கொண்ட அடையாள அட்டையின் இலக்க வரிசையைச் சொல்லுமாறு இலங்கை இராணுவம் ஒருபோதும் கேட்டதில்லை. எனக்கு இந்தியாவில் அடையாள அட்டை என்ற முறையே இல்லை என்பது ஞாபகம் வந்தது.

எல்லோரும் மௌனமாயிருக்க கிழவர் மீண்டும் வற்புறுத்தப் பட்டார். அதற்கு மேலும் பொறுக்கமாட்டாத பெரியவர், "வேசையின்ரையள்" என்று ஆரம்பித்துச் சரமாரியாகத் திட்டவாரம்பித்தார். அமைதியின் காவலருக்கோ ஆவேசம் வந்துவிட்டது. "Translate this " என்று இளைஞனெருவனுக்குக் கட்டளையிட்டார். அவ் இளைஞன் வெலவெலத்துப்போய், "I don't know English" என்ருன். "அப்போ நீ பேசியது? ..... அதுதான் ஆங்கிலம் ..... ", படு கொச்சையான ஆங்கிலத் திட்டல்களுடன் இளைஞனின் வயிற்றில் மிகக் கடுமையாக புட்ஸ் காலால் அமைதி நிலைநிறுத்தப் பட்டது. காந்தியின் சீடரின் அரசல்லவோ? முதியோர் வதை வேண்டாமெனத் தீர்மானித்துள்ளனர் போலும். நினைக்க எனக்குச் சிரிப்பு வந்தது. இந்த விதமான கூத்துக்களையெல்லாம் தூரவிருந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவதானித்த அமைதிப் படைப்பிரிவின் தளபதி நெருங்கிவந்து எல்லோர் முகத்தையும் ஆராயத் தொடங்கினார்.

ஒவ்வொருவரின் முன்னாலும் நின்று ஏறஇறங்க அவதானித்து, சந்தேகத்துக் கிடமானோரின் உள்ளங்கை, கைமொளிகள், முழங்கை போன்றவற்றை வருடிப் பார்த்து, தோள் பட்டைகளை அசைத்துப் பார்த்து, தனது சோதனையை நடாத்திக் கொண்டிருந்தார். எனது முறை வருமுன்னரே சிலருக்கு விடுதலை வழங்கினார். தனது கேள்விகளுக்குச் சரியாகப் பதிலளிக்காதோரை ஓரமாகச் சென்று முழங்காலில் நிற்கும்படி கட்டளையிட்டார். என்னை ஏற இறங்கப் பார்க்கவும் நான் நடுநடுங்கிப் பவ்யமாக நின்றேன். "நீயொரு புலியைப் போல் உடையணிந்திருக்கிறாய்" என ஆங்கிலத்தில் முணுமுணுத்தார். பின்பு தன்னைப் பின்தொடர்ந்து வருமாறு சைகை செய்துவிட்டு நடக்க நான் பலியாடாகப் பின் தொடர்ந்தேன். சூழ்நிலைக் கைதிகளாகத் தவித்துக் கொண்டிருந்த சக மண்ணின் மைந்தர்கள் அநுதாபத்துடன் என்னைப் பார்க்க, நெஞ்சு முழுவதும் பயம் வியாபிக்க, கால்கள் ஏனோதானோவென்று அசைந்தன. தலைவர் மிடுக்காகத் திரும்பி மீண்டுமொரு தரம் என்மேல் பார்வையை ஓடவிட்டார். நான் தயாராக வைத்திருந்த தேசிய அடையாள அட்டையையும், சென்னைக் கல்லூரியின் அடையாள அட்டையையும் நீட்டினேன். வாங்கி இரண்டையும் ஆராய்ந்தவர் தேசிய அடையாள அட்டையை மட்டும் தூக்கிப் பிடித்து, " இது போலி" என உறுமினார். நான் இல்லையென மறுக்கவும் சிரிப்புடன், "எல்லோரும் இதே பொய்யைத்தான் சொல்கிறார்கள்" என்றார். பின் இரண்டு அடையாள அட்டைகளையும் அருகில் நின்ற ஜீப் ஒன்றின் பானட்டில் போட்டுவிட்டு சாவதானமாக பால்த் தேநீரைச் சுவைக்க வாரம்பித்தார். சிறிய இடைவெளியின் பின்னால் நானும் ஆங்கிலத்தில், நான் இந்தியாவில் கல்வி பயிலும் மாணவனென்பதைக் கூறினேன். "ஆமாம், எனக்குத் தெரியும். நீ 'B.Com' படிப்பதாக அடையாள அட்டை சொல்லுகிறது. எங்கே 'syllabus'ஐச் சொல் பார்க்கலாம்", என்றார். நான் இது என்ன புதுக்கரடி? என்று திகைத்து நிற்க, "நீங்கள் எங்களை ஏமாற்ற முடியாது. நான் பனாரஸ் பல்கலைக் கழகத்தில் 'M.Com' பட்டப் படிப்பை முடித்தவன்" என்றார். நான் 'syllabus'இனை பயபக்தியுடன் ஒப்புவித்து அவரை ஏமாற்றும் நோக்கம் எனக்குக் கொஞ்சம்கூட இல்லையென்றும் என்னை வீணாகச் சந்தேகிக்காதீர்களென்றும் வினயமாக வேண்டிக் கொண்டேன்.

"உன்னை யார் சந்தேகித்ததாகச் சொன்னது? இல்லையில்லை. நீ மாணவனென்பதை ஏற்றுக் கொள்கிறேன். உனது பட்டப் படிப்புக்கு முன்னால் புலிகளிடம் இராணுவப் பயிற்சி பெற்றுக் கொண்டதை நீ தான் ஒப்புக் கொள்ள மறுக்கிறாய்" என்று கூறிவிட்டு என் பதிலுக்குக் கூடக் காத்திருக்காமல் ஒரு சிறு இராஜநடை போட்டார். இராஜநடை போட்டு முடியும்வரை நான் காத்திருந்தேன். பின்பு நான் பத்தாந்தரம் வரையிலும் அருகிலிருக்கும் கல்லூரியிலேயே படித்ததையும் பின்பு 1983 கலவரத்தின் பின்பு இந்தியா சென்று உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்துக் கொண்டு பட்டப் படிப்பை மேற்கொள்வதை வருடவாரியாக அவருக்கு விளக்கினேன். மெலிதான தலையாட்டல்களினால் நான் கூறியவற்றை ஆமோதித்துக் கொண்டிருந்த அவர் திடுமென "உனது ஊரில் புலி நடமாட்டம் எப்படி?" என்றார். நான் ஊருக்கு வந்து இரண்டு கிழமைகள்தான். ஆதலால் நான் ஏதுமறியேன் பராபரமே எனத் தாள் பணிந்தேன். "ஆகா அவ்வாறாயின் நீ புலி" என மீண்டும் அண்ணன் கர்ஜித்தான்.

எனக்கு அவரது உள்நோக்கம் நன்றாகப் புரிந்து விட்டது. என்னையொரு கையாளாக்கவே இந்த நாடகம் யாவும் என்பதை நான் புரிந்து கொண்டாலும் என்னைத் தொடர்ந்து எப்படி அணுகுவார்கள் என்பதும், இன்றைய தினமே எனது விடுதலை சாத்தியமா? என்பதுவும் என்னை அச்சுறுத்த வாரம்பித்தன. எனது தலையின்மேல் படிப்பறிவும், சரளமான உலகறிவும் வாய்க்கப்பெற்ற மூன்றாந்தர இராணுவ அதிகாரி என்ற கொலைவாள் தொங்குவதை எண்ண அம்மாவின் கலக்கமே கண்ணுள் எழுந்தது.

"உனது ஊரிலே இன்னமும் புலிகள் உண்டு. அவர்களை ஏன் காட்டித்தர மறுக்கின்றாய்?". மீண்டும் நான் ஐந்து வருடங்களாக ஊரிலில்லா திருந்ததையும், இப்போதும் இரு கிழமைகளுள் நான் யாரையும் அவ்வாறு அடையாளம் காணவில்லையென்றும் கூறினேன். தனது துணையதிகாரியை அழைத்து ஏதோ சில கட்டளைகளைப் பிறப்பித்த தலைவர் என் பக்கம் திரும்பி, "நீ எமது அமைதிப் பணிகளைப் பற்றி என்ன நினைக்கிறாய்? புலிகளின் போக்கு சரியானதென நம்புகிறாயா?" என்றார். எனக்குத் தலை வெடித்தது. எனது இந்தத் தர்மசங்கட நிலையை, 'தூக்குமேடைக் குறிப்பில்' வரும் நாஜி விசாரணை அதிகாரியிடம் அகப்பட்டுக் கொண்ட ஒருவரால்தான் சரியாகப் புரிந்து கொள்ள முடியுமென அக்கணத்தில் நம்பினேன். இன்னமும் எத்தனைபேர் இப்படியெல்லாம் தவித்தனரோ? நான் எனது அபிப்பிராயமாக, கேட்கும் மனிதனின் செவிகளை நாறவைக்கக் கூடியதொரு புளுகுமூட்டையை அவிழ்த்து விட்டேன். எல்லாவற்றைம் கேட்டுக்கொண்டிருந்த அண்ணன் மீண்டும் என்னைக் கையாளாக மாறிவிடுமாறு எச்சரித்தார். நான் மிகவும் பணிவாக, இலங்கை அரசசேவகரின் பிள்ளையான நான் மாட்சிமை தங்கிய அரசுகளுக் கெதிராக கனவிலும் துரோகம்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நினைக்காத மாணவனென்பதை வலியுறுத்தி எனது இயலாத் தன்மையைப் புரிய வைத்தேன். அண்ணன் உடனே சிநேகபூர்வமாகி, "சரி ..... என்னோடுவந்து 'company' கொடு" என்றார். "இல்லை ஐயா எனது குடும்பத்தினர் மத நம்பிக்கை மிகுந்தோர்" குடிப்பழக்கம் எனக்குக் கிடையாதென்று அவரது வேண்டுகோளை நிராகரித்தேன். "அவ்வாருயின் நீ புலி. புலிதான் மதுபானம் அருந்தாது" தளபதி தனது கண்டுபிடிப்பைத் தானே தலையாட்டி ரசித்துக் கொண்டார்.

இவ்வாருக நாடகம் நீண்டது. வெளியில் சனநடமாற்றம் அற்றுப் போயிருந்தது. வீட்டார் என்னைத் தேடுவார்கள் என்பதை நினைக்க பயம் அடிவயிற்றைச் சுருட்டியது. நான் விலாவாரியாகப் பணிவுடன் சொல்லக் கேட்டுக் கொள்ளும் 'தலைவர்' பின்பு புலியைக் காட்டு என்று சிநேக பூர்வமாவார். நான் இயலாத் தன்மையைச் சாக்காக்க, வேதாளம் மீண்டும் முருங்க மரமேறி,"நீ புலி", என்று பல்லிளிக்கும். இறுதியாக, இருட்டிவிட்டதால் வீட்டார் என்னைத் தேடியலைவார்கள், ஆதலால் மேலும் என்மேல் சந்தேகமிருப்பின் மறுநாள் காலையிலே எனது தந்தையாருடன் வந்து விடுவதாக வாக்களித்தேன். தலைவர் என்ன நினைத்தாரோ, 'தொலை பயலே' என்னும் பாணியில் விடை தந்தார். எனது கல்லூரி அடையாள அட்டையை மட்டும் வைத்துக் கொண்டார். கேட்டதற்கு, தனது சந்தேகங்களை நிவர்த்தி செய்ய சென்னையைத் தொடர்பு கொண்டு விசாரிக்கப் போவதாகவும், அப்படி விசாரிக்க அடையாள அட்டை தேவைப்படு மாதலால் இந்தியா செல்ல முதற்தினம் வந்து அதனைப் பெற்றுக் கொள்ளுமாறும் கட்டளையிட்டார்.

நான் தலைதப்பியதே பெரும் புண்ணியமென்பதைப் புரிந்து கொண்டு வீட்டை நோக்கி சைக்கிளைத் துரத்தினேன். உடைகள் வேர்வையில் தோய்ந்திருந்தன. அம்மா வாயிற்படியில் காத்திருந்தார். மெதுவாக அம்மாவிடம் நடந்ததைச் சொன்னேன். "நல்ல காலம் கடவுள் காப்பாற்றியது ..... நாளைக்கே கொழும்புக்குப் போயிடு" என்ற அம்மாவை முறைத்தேன். அம்மாவின் கண்களில் கண்ணீர் பெருக ஆரம்பித்தது. குரல் தளதளக்க, "நாலு வருசத்திற்குப் பிறகு ஊருக்கு வந்து நீ அடி வாங்க ..... நீ எந்த முகாமில எண்டு நாங்கள் தேடியலைய ..... வேண்டாம் ராசா ..... எனக்கென்ன விருப்பமே உன்னைத் துரத்த? எப்பதான் எங்களுக்கு விடிவோ?" அம்மாவுக்கு நாளையே நான் கொழும்புக்குப் போவதாக வாக்குறுதியளித்து ஒருவாறு சமாதானப் படுத்தினேன். இரவுணவை முடித்துக் கொண்டு தூங்கலாமெனச் தலை சாய்த்தேன். பட்ட காயமொன்றின் ரணம் கிளறப்படக் கிளறப்பட மேலும் மேலும் யாரோ கிண்டுவது போல் தலை வலித்தது. அம்மாவின் நிம்மதிக்காகவேனும் நாளை கொழும்பு போவதே உசிதமெனத் தோன்றியது. தொலைவில் ஏதோ வெடிச் சத்தம் கேட்க கட்டிலிலிருந்து எழும்ப முயன்றேன். தடுத்த அம்மா, கிழக்குப் பக்கமாகத்தான் கேட்குது. நாளைக்கு அந்த இடம் அவ்வளவுதான்" என்றார். பொறுக்கமாட்டாது எழுந்து யன்னலூடாக எட்டிப் பார்க்கையில் அமைதி காக்கும் சிறு கும்பலொன்று ஒழுங்கையில் அலங்கமலங்க விழித்தபடி நடைபோட்டுக் கொண்டிருந்தது.




Roger Sanchez — நிக்கராகுவாவின் முன்னணிக் கேலிச் சித்திரக்காரர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நீண்டகாலமாக எதையும் நான் எழுதவில்லை. பனிமலரில் தொடர்ந்து எழுதுமாறு என்னைக் கேட்டபொழுது (நான் அவ்வளவுதூரம் எழுத்துலக ஜாம்பவனுக்கும், இல்லை பனிமலருக்கு எழுதுவதற்கு ஆள் கிடைக்கவில்லை. இரண்டு காரணங்களில் ஒன்றை நீங்களே தீர்மானிக்கலாம்.) வாம்போவா ராணுவப் பயிற்சிக் கல்லூரியில் லூசுன் நிகழ்த்திய உரை நினைவுக்கு வந்தது. அவ்வுரையின் ஓரிடத்தில், "பீக்கிங்கில் ஒரு வேளை உணவிற்கும் வழியற்று, பாணுக்குக் காசு தேடி அலைந்தபோது என்னால் கதையெழுத முடியவில்லை. காசு கிடைத்து, பாண் வாங்கிச் சாப்பிட்ட பின்னால்தான் என்னால் எழுத முடிந்தது", என்று கூறியிருந்தார். லண்டனில் 'உயிர்வாழ்ந்து'வரும் தமிழர்களுக்கு இது பொருந்துவது போலவே எனக்கும் பொருந்தும். ஆனால், இப்போது நான் மாறியுள்ள புது வேலையில் ஓரளவு எழுதுவதற்கு நேரம் கிடைத்துள்ளதுதான் மாதொருபாகனின் எழுத்தை வாசிக்கும் பெரும்பேற்றை உங்களுக்கு வழங்கியுள்ளது என்பதை உங்களிடத்தில் நான் குறிப்பிட்டுத் தானாக வேண்டும்.

O

வெய்யில் எரித்துக் கொண்டிருந்த ஒரு ஞாயிற்றுக்கிழமை, மாலை எட்டு மணிக்கு, நீண்ட மாதங்களின் பின்னர் கிடைத்த தனிமையில் 'மழை' நாடகம் கேட்க முடிந்தது. சில தினங்களுக்கு முன்னர்தான் சிலர் புதிதாக அந்த நாடகத்தைப் பார்த்திருந்தார்கள். என்னால் அதற்குப் போகமுடியவில்லை. இலங்கை வானொலியில் எழுபதுகளின் கடைக்கூற்றிலோ, எண்பதுகளின் தொடக்கத்திலோ மேடை நாடக வரிசையில் ஒலிபரப்பான 'மழை' நாடகத்தின் கசெற்றைத்தான் கேட்க முடிந்தது.

அதில், ஆனந்தராணியினதும் பாலேந்திராவினதும் நடிப்புத் திறமையை குரல்களினூடும் அனுபவித்தேன். எழுபதாம் ஆண்டுகளில் ஈழத்தில் உருவான ஆற்றலும் வீச்சும் கொண்ட மேடைக் கலைஞர்கள் இவர்கள். இவர்களில் பாலேந்திராவைப் பற்றி எழுதப்பட்ட, பேசப்பட்ட அளவிற்கு ஆனந்தராணியின் ஒருபக்கம் அறியப்படவில்லை. அவர் ஒரு திறமை மிக்க கலைஞராக மட்டும் அடையாளம் காணப்பட்டுள்ளார். நான் அறிந்தவரையில் ஏறக்குறைய பதினைந்தாண்டுகளாகத் தொடர்ந்து எமது மேடையில் நடித்துவரும் ஒரேயொரு 'பெண் கலைஞர்' (தொழில்முறைக் கலைஞர்கள் உள்ளடங்கலாக) ஆனந்தராணிதான். தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டமே, தமிழ்ப் பெண்களிடம் பெண் விடுதலைக் கருத்துக்களை முன்னிலைக்குக் கொண்டுவந்தது. அதன் பிறகே பெண்கள் அதிகளவில் அரசியல், கலாச்சார, இலக்கிய முயற்சிகளில் பங்கேற்றார்கள். ஆனால் ஆனந்தராணியின் மேடை வரவு அதற்கு முந்தயது. நடனம், நாடகம், திரைப்படம் (வாடைக்காற்று) என்றெல்லாம் ஆனந்தராணி கால் பதித்தது, யாழ்ப்பாணத்தில் பெண்கள் பரவலாக சயிக்கிளோட ஆரம்பித்த, பெண்ணடிமைக் கருத்துக்கள் உச்சத்திலிருந்த காலத்தில். இந்தப் பிண்ணணியில் ஆனந்தராணியின் பங்கு முதன்மையுடையது.

நான் எழுத நினைத்தது, ஆனந்தராணி பற்றியல்ல. சுமார் பத்தாண்டுகளுக்குப் பிறகும், நாங்கள் 'மழை'யைத்தான் பார்க்க வேண்டியிருக்கிறது என்பது பற்றியே.

லண்டனில், பாலேந்திராவும் சரி, தாசீசியசும் சரி ஏன் புதிய நாடகங்களைத் தர முடியவில்லை?

OO

நாடகம் பற்றி எழுதுகிறபோது அண்மையில் படித்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நெடுங்கதையொன்றும் நினைவுக்கு வந்தது. ஈழத்துச் சோமு என்கிற சோமகாந்தன் எழுதிய 'விடிவெள்ளி பூத்தது' எனுமந்த நூலுக்கு, 'இலக்கியமும் வரலாறும்' என்று வழமையைப் போலல்லாது மூன்று பக்கங்களில் மட்டும் பேராசிரியர் சிவத்தம்பி முன்னுரை எழுதியுள்ளார். விசயங்களைச் சுருக்கமாக எழுத விரும்பியோ அல்லது இந்த நெடுங்கதைக்கு மூன்றுபக்க முன்னுரையே போதும் என்றோ சிவத்தம்பி கருதியிருக்கலாம்.

முன்னுரையில் இரண்டு முக்கிய விடயங்களை சிவத்தம்பி கூறியுள்ளார். அவற்றை அவரது வார்த்தைகளிலேயே தருகிறேன்:

> "மிக அண்மையில், யாழ்-பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற, "எழுபதுகளிலிருந்து ஈழத்துக் கலை இலக்கியம்" என்ற கருத்தரங்கத் தொடரின் அங்குரார்ப்பண, அறிமுகவுரையில் ஈழத்தில் 1970–89க் காலப்பகுதியின் புனைகதை முயற்சிகளைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது, இக்காலப் பகுதியிலே தோன்றிய பிரதானமான நாவல்கள் – டானியலின் 'பஞ்சமர்', செங்கையாழியானின் 'காட்டாறு' போன்றவை – இலக்கியமென வெளிவந்த வரலாறுகளே (History as Literature) என்று கூறினேன்.
> அந்த உரையை ஆற்றின அன்றிரவு நண்பர் சோமு தந்த, இந்த நாவலின் கையெழுத்துப் பிரதியை வாசித்த பொழுது, அந்தப் பட்டியலிற் சேரவேண்டிய மேலுமொரு படைப்பு வெளிவரப் போகின்றது என்பதை உணர்ந்து கொண்டேன்.
>
> உண்மையில் பஞ்சமர் முதல், இந்த நாவல்வரை வரும் இத்தகைய நாவல்கள் யாவும், "இலக்கியங்களென அன்றேல் இலக்கியங்களாக வரும் வரலாறுகளே"
> இவற்றிற் காணப்படும் முக்கியமான பிரச்சினைப் பொருள் யாதெனில், இவை எந்த அளவிற்கு இலக்கியங்களாக உள்ளன என்பதேயாகும். அந்த உரைக்கல் ஒன்றை மாத்திரம் வைத்துக்கொண்டே இவர்களை விழுத்த விரும்பும் அழகியல் விற்பன்னர்கள் பலர் இருக்கிறார்கள்.
> இந்த வரலாற்றுக் கதைகளின் ஒரு முக்கிய பண்பு, இவை 'நாவல்'களாக இருப்பதிலும் பார்க்க 'கதை'களாக இருப்பதுதான். கதை என்பது தொடர்நிலைச் சம்பவக்கோவை வெளிப்பாடு. உண்மையான நாவல் என்பது மனித உறவுச் சிக்கல் ஒன்றின் அல்லது பலவற்றின் சித்தரிப்பு (depiction, potrayal). நாவலுக்கு ஒரு கதைச்சட்டகம் வேண்டும். கதையே நாவலாகிவிடாது. ஆனால் இலக்கியம் சமூகப் பண்பாடுடையதாக இருத்தல் வேண்டுமென்பதை வலியுறுத்துவோர் சில கட்டங்களில் சித்தரிப்புக்கு முன்னர் விவரணம் அவசியமாகின்றது என்பர். நண்பர் சோமுவின் இந்தப் படைப்பு யாழ்ப்பாணக் கிராமத்து பிராமணக் குடும்பமொன்றின் விவரணம்"

இதைப் படித்தபோது, இந்தக் கதை 'History as Literature' எனச் சொல்லுமளவுக்கு பொருத்தமானதுதானா? எனும் ஐயம் மாதொருபாகனுக்கு வந்தது.

"இலக்கியமென அல்லது இலக்கியமாக" வெளிவரும் வரலாற்றுக் கதையில் வரலாறு திசைமாறுமோ? அல்லது அப்படித் திசைமாறினால்தான் வரலாற்றுக் கதையோ என மாதொருபாகன் தலையைப் பிய்த்துக் கொண்டது சிவத்தம்பிக்குப் புரியுமா? இந்தக் கதை நிகழ்ந்தது, தோழர் பொன். கந்தையாவின் காலம். அவர் வடக்கின் ஒரேயொரு கம்யூனிஸ்ட் பாராளுமன்ற உறுப்பினராக தேர்தலில் வெற்றிபெற்ற காலம். இக் காலத்தில் வாழ்ந்த, இந்தக் கதையில் வருகிற உப பாத்திரங்களில் ஒருவர் சடாச்சரக் குருக்கள் – மாவைக் கந்தனின் ஆதீன கர்த்தா. யாழ்ப்பாணப் பிராமணர்களின் தலைவர் போன்றவர். இக் கதையின் ஓரிடத்தில், "எல்லாம் ஒழுங்காக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நடக்கவேணும் என்பதில் எங்கள் குருக்கள் வெகு கறாரானவர். மற்றக் கோயில்களின் முதலாளிமார் படிக்காதவர்கள். கோயில் விஷயம் ஒன்றும் தெரியாது. வருமானக் கணக்கில்தான் குறியாயிருப்பினம். முதலாளி என்ற திமிரும் அவையளுக்கு ..... குருக்கள் ஆகம சாஸ்திரங்கள் நல்லாகப் பத்தவர். எப்படிக் கோயிலை நடத்த வேணுமென்று அவருக்கு நல்லாகத் தெரியும். கந்தசாமியாருக்கு வாற வரும்படி யெல்லாத்தையும் கந்தசாமியாருக்கே செலவளித்துச் சிறப்புச் செய்பவர். அதனால் அவர் மனச்சாட்சிக்குத் தவிர வேறு ஆருக்கும் பயப்படுவதில்லை" என்று ஒரு பாத்திரம் அவரைப் பற்றிக் கூறுகின்றது. இந்தக் கதையை வாசிப்பவர்கள், ஒரு முற்போக்காளராக மாவை ஆதீனகர்த்தாவை சித்தரிப்பதை கதாபாத்திரங்களின் கூற்றுக்களாக மாத்திரமன்றி கதாசிரியரின் கூற்றுக்களாகவும் உணரலாம். இங்கேதான், வரலாற்றுக் கதைகளில், வரலாற்றின் பங்கென்ன என்ற கேள்வியை மாதொருபாகன் முன்மொழிகிறான். மாதொருபாகனைப் பொறுத்தவரை மாவையாதீனகர்த்தா பற்றிய பிம்பம் வேறு வகையிற்றான் உள்ளது.

> "இந்தச் சந்தர்ப்பத்தில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் காங்கேசன்துறைக் கிளையின் சார்பாக சி.சிதம்பரி, பூ.சின்னராசா ஆகியோர் கையெழுத்திட்டு மாவை ஆதீனகர்த்தாவிற்கு ஆலயப் பிரவேசம் பற்றிய கடிதத்தை அனுப்பினார்கள். அதன் பிரதிகள் அரசாங்க, பொலிஸ் அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டன. ஆலயக் கதவுகளை தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் திறந்து விடும்படியே அக்கடிதத்தில் கேட்கப்பட்டிருந்தது. அதேவேளை தமிழர் சமுதாயத்தில் நல்லெண்ணம் கொண்ட சகலரும், மாவை ஆலயக் கதவுகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் திறந்து விடப்படுவதற்கு ஆதரவு நல்கும்படியும் கோரப்பட்டது. ஆலயப் பிரவேசத்திற்கான இவ் வேண்டுகோள் சாதி அகம்பாவம் கொண்டவர்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியது. 'சைவ ஆகமத்திற்கு ஆபத்து' என்றும், 'ஆலயப் புனிதத்திற்கு அச்சுறுத்தல்' என்றும் கூறி சாதிமான்கள் ஒன்றுகூடி தாழ்த்தப்பட்ட மக்களின் சமத்துவத்திற்கு எதிரே அணி திரட்டினர். <u>ஆலய தர்மகர்த்தாவான துரைசாமிக் குருக்கள்</u> (அழுத்தம் மாதொருபாகன்) அரசாங்க – பொலிஸ் அதிபர்கள் இணைந்து நடத்திய கூட்டத்தில் ஆலயப் பிரவேசத்திற்கு தனது மூர்க்கத்தனமான எதிர்ப்பைத் தெரிவித்தார். எக்கட்டத்திலும் ஆலயத்தைத் திறந்துவிடப் போவதில்லை என உறுதி எடுத்துக் கொண்டார். தனக்குத் துணையாக முன்னாள் வவுனியா பாராளுமன்ற உறுப்பினரும் கல்விமானுமாகிய திரு ஸி.சுந்தரலிங்கத்தை அணைத்துக் கொண்டார். 'பிடிவாதக்காரர்' 'தோற்கடிக்கப்பட முடியாத தனிநபர்' என்று பிரமை கொள்ளப் பட்டவரும் – 'அடங்காத் தமிழன்' என்று பெயரிடப் பட்டவருமான திரு சுந்தரலிங்கம் வீண்தனமாகத் தன்னை இவ் ஆலயப் பிரவேசப் போராட்டத்தில் மாட்டிக் கொண்டார். யானை சேற்றில் மாறிமாறிக் காலைப் புதைப்பதுபோல் தாழ்த்தப்பட்ட மக்களின் நியாயமான ஆலயப் பிரவேசப் போராட்டத்தின் குறுக்கே துரைசாமிக் குருக்களும் – சுந்தரலிங்கமும் தங்களை நிறுத்திக் கொண்டனர். வட பகுதியின் சகல சாதிமான்களும் – சாதிவெறியர்களும் தமது பிரதிநிதியாக சுந்தரலிங்கத்தை மாவிட்டபுரத்தின் முன் நிறுத்திக் கொண்டனர்."

மேற் குறிப்பிட்ட மேற்கோள் வெகுஜனன், இராவணா ஆகியோரால் எழுதப்பட்டு 'புதியபூமி' வெளியிட்ட "சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும்" எனும் நூலிலிருந்து தரப்பட்டவை. (பக்கம் 112) இது தான் துரைசாமிக் குருக்கள் (கதையின்படி சடாச்சரக் குருக்கள்) பற்றிய மாதொருபாகனின் அபிப்பிராயமுமாகும். இம் முரண்பாட்டை உணரமுடியாத முட்டாள்தனம் பேராசிரியர் சிவத்தம்பிக்குக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிடையாதெனவே மாதொருபாகன் இன்னமும் நம்புகிறான். வழமையான அவரது மழுப்பல் அல்லது மூடிமறைப்பு என்பதே அவனது முடிவு.

000

அடங்காத் தமிழன் சி.சுந்தரலிங்கத்தின் பெயர் மறக்காமல் லண்டனில் வெளிவரும் 'தமிழ் ரைம்ஸ்' மாசிகையையும் மாதொருபாகனுக்கு நினைவு ஊட்டிற்று. அவரின் மறைவுக்கு 'தமிழ் ரைம்ஸ்' அஞ்சலி வெளியிட்டிருந்தது. அவர் தமிழ்ச் சமூகத்திற்கு அது, இது, அதற்குமப்பால் அது, அதற்குமப்பால் இதுவெல்லாம் செய்தார் என்று நினைவு கூர்ந்தது. ஆனால் அவர் தமிழ்ச் சமூகத்திற்கு வாழ்நாளில் செய்த பெரும்பணியை மறந்து, மன்னிக்கவும் - மறைத்துவிட்டது. தமிழ்ச் சமுகத்தின் ஒரு பகுதி மக்களின் - சிறுபான்மைத் தமிழர்களின் உணர்வுகளை வாழ்நாள் முழுவதும் புண்படுத்திய பெரும்பணியை 'தமிழ் ரைம்ஸ்' மறைத்து விட்டது. (ஆரம்ப காலங்களில் 'தமிழ் ரைம்ஸ்' சாதிரீதியான மணமகன்/மகள் தேவை விளம்பரங்களையும் வெளியிட்டது. பின்னர் 'தனிநபர்கள்' சிலரின் எதிர்ப்பால் அவை தவிர்க்கப் பட்டது.) ஒருவரின் மரணத்தின் போது அவரின் நல்ல குணங்களை மட்டுமே பேசவேண்டும் என்ற 'தமிழரின் பாரம்பரியத்திற்கு' இசைவாகவே 'தமிழ் ரைம்ஸ்'சும் அன்று எழுதியிருக்க வேண்டும். இனிமேலாவது இவ்வாறான தவறான பாரம்பரியங்களை கைவிடுமாறும் மாதொருபாகன் வேண்டுதல் செய்கிறான்.

0000

உலகின் பல பாகங்களிலும் அகதியாக பரந்திருக்கும் எம்மவர்கள் தங்கள் புகலிடங்களில் இருந்து பல்வேறு சிறு சஞ்சிகைகளை வெளியிடுகிறார்கள். ஜேர்மனியில் இருந்து மட்டும் சுமார் பதினைந்து சஞ்சிகைகள் வெளிவருகின்றன. நான்கு சஞ்சிகைகள் பிரான்ஸிலிருந்தும், ஒல்லாந்திலிருந்து இரண்டும், கனடாவிலிருந்து மூன்றும், நோர்வேயிலிருந்து இரண்டும், சுவிஸில் இருந்து ஒன்றும் வெளிவருகின்றன. இவற்றில் சிலவற்றை தொடர்ந்து வாசிக்கும் வாய்ப்பு மாதொருபாகனுக்கு கிடைத்துள்ளது. நோர்வேயிலிருந்து வெளிவரும் சுவடுகளின் பிந்திய இதழில் (இதழ் 18, ஏப்ரல்/மே 90) "நன்றி; மீண்டும் வரவேண்டாம்" என்ற தொடர் கட்டுரையை படித்தேன். அதிலிருந்து ஒரு சிறு பகுதி:

> "இலங்கை தொடர்பான விவகாரங்களில் திட்டமிடல், செயற்படுத்தலுக்கு பொறுப்பாக இருந்தவர்களில் மிக முக்கியமானவர் இந்தியாவின் இலங்கைத் தூதுவர் ஜே.என்.டிக்ஸிற் ஆவார். பின்னால் இத்திட்டங்கள். 'டிக்ஸிற் கொள்கை' (Dixit Doctrine) என அரசியல் விமர்சகர்களால் குறிப்பிடப்படும் அளவுக்கு இலங்கை விவகாரங்களில் செல்வாக்கு செலுத்தியவர். தனது அண்டை நாடுகள் தொடர்பாக இந்தியாவில் அண்மைக் காலமாக கையாளப்பட்டு வரும் 'அருவருப்பான' கொள்கையினை நடைமுறைப் படுத்துவதில் முன்னின்றவர் இவர். இவர் ஆற்றிய உரையொன்றில் (A Demonstration of India's Power project - Lanka Guardian, Jan 15, 1990), "அயல் நாடுகளான உங்களின் நடவடிக்கைகள் இந்தியாவுக்கு அச்சுறுத்தலாக அமையின் உங்களை மீண்டும் வழிக்குக் கொண்டுவருவதற்காக உங்கள் அதிகார எல்லைக்குள்ளேயே எம்மை நுழைக்க (உங்களுக்குத் தலையிடி கொடுக்க) முடியும்... இப்படிச் சொல்வது முரட்டுத் தனமாகத் தெரியலாம். ஆனால் அப்படியல்ல", என்று கூச்சமின்றிக் கூறிய மனிதர். அதனை மேலும் இலகுவாகச் சொல்லப் போனால் இந்தியா நினைத்தால், இலங்கைக்கு - இலங்கைக்குள்ளேயே, பாகிஸ்தானுக்கு - பாகிஸ்தானுக்குள்ளேயே, பங்களாதேசத்துக்கு -

www.tamilarangam.net

பங்களா தேசத்துக்குள்ளேயே பிரச்சனைகளை உருவாக்க முடியும். இதையே இவரும் ஏனைய இராஜ தந்திரிகளும் இந்தியாவின் பலத்தின் நிழல் வீச்சு (Power projection) என்று கருதினார்கள்.

Power Projection என்பது பற்றி EROS லண்டனில் 'இந்தியா கிளப்பில்' ஒழுங்குசெய்த இலங்கை–இந்திய ஒப்பந்தம் பற்றிய கருத்தரங்கில் பேசிய சுப்பிரமணியம் குறிப்பிட்டது நினைவுக்கு வந்தது.

"நாங்கள் அமிர்தசரஸில் பொற்கோயிலின் மீது தாக்குதல் தொடுத்தபோது, இந்தியாவின் ஜனாதிபதி ஒரு சீக்கியர். படைகளின் தளபதியும் ஒரு சீக்கியர். தமிழர் பிரச்சனையின் சார்பாக நாங்கள் இலங்கையில் நுழைந்த போது எமது நாட்டின் ஜனாதிபதி ஒரு தமிழர். எமது நாட்டின் தளபதியும் தமிழர். இவ்வாறான நிலைமையை உலகத்தில் இந்தியாவில் மட்டுமே காணமுடியும்".

---

நவீன தமிழ் நாடகம் பரந்த மக்கள் மட்டத்தில் இன்னும் அறிமுகப் படுத்தப்பட வேண்டிய நிலையிலேயே இருக்கின்றது. ஒரு உற்பத்திப் பொருளை அறிமுகப்படுத்தும் போது எடுக்கப்படும் பாதுகாப்பும், சிரத்தையும், தர நிச்சயமும் நாடகத்துக்கும் தேவையே.


பணம் வாங்கிக்கொண்டு பார்வையாளனுக்கு நாடகம் காண்பிக்கப் படுகிறது. இத்தகைய தயாரிப்பாளர்–பார்வையாளர் உறவு வெறும் உணர்ச்சிகளிலோ, நல்லெண்ணத்திலோ, ஆர்வத்திலோ சஞ்சரிக்க முடியாது. நாடகம் பார்வையாளனிடத்தில் சுவையேற்படுத்துதல் முக்கியம். இல்லாவிடில் பணம் கொடுத்து நாடகம் போய்ப் பார்க்க வேண்டுமென்று அவனுக்கு ஒரு வில்லங்கமும் இல்லை."

*-மாவை நித்தியானந்தன்.*

*(நன்றி: அலை-9, வைகாசி-ஆனி 1977)*

---

மகாகவியின் குறும்பா



*சொந்தத்திற் கார், கொழும்பிற் காணி,*
*சோக்கான வீடு, வயல், கேணி*
*இந்தளவும் கொண்டுவரின்,*
*இக்கணமே வாணியின் பாற்*
*சிந்தை இழப்பான் தண்ட பாணி.*

---

"நானும் பிறந்தது முதலாக இன்றுவரை பார்த்துக் கொண்டு வருகிறேன். பாட்டுக் கச்சேரி தொடங்குகிறது. வித்வான் 'வாதாபி கணபதிம்' என்று ஆரம்பஞ் செய்கிறார். 'ராம நீ ஸமான மெவரு', 'மரியாத காதுரா', 'வரமு லொஸகி' ..... ஐயையோ, ஐயையோ ஒரே கதை. எந்த வித்வான் வந்தாலும் இதே கதைதான். தமிழ் நாட்டு ஜனங்களுக்கு இரும்புக் காதாக இருப்பதால், திரும்பத் திரும்ப ஏழெட்டுப் பாட்டுக்களை வருஷக் கணக்காகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். தோற்காதுள்ள தேசங்களிலே இந்தத் துன்பத்தைப் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள்"

*- பாரதியார்*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


WITH THE BEST COMPLIMENTS

RATNA & Co.
SOLICITORS

168A, HIGH STREET NORTH
LONDON E6 2JA

TELEPHONE: 081 470 8818.



KUMARANS

for

Sri Lankan & South Indian Food Products,
Magazines, News Papers,
Cine-Publications
Tamil Audio & Video Cassettes and CD
also
Fax Services to Sri Lanka & South India

KUMARANS
142, Hoe Street, Walthamstow, London E17 4QR
Tel: 081 521 4955 & 081 520 5960
Fax: 081 521 9482
Tube: Walthamstow Central

Open Seven Days a week. (9a.m.-9p.m.)
Mail Order Service Available



பனிமலரின்

பணி தொடரட்டும்!

A.G. ENTERPRISES
இலங்கை-இந்திய பொருட்கள் விற்பனையாளர்.
30 LOAMPIT HILL, LONDON SE 13
081-691-9981.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# Palmyrah

A taste of Sri Lanka

Sri Lankan & South Indian Cuisine

## Introducing a Special Sunday Buffet

from 12.45am to 4.15pm
£5.95 per person £3.00 children

Every Monday a Sri Lankan Buffet
with a variety of food
£5.95 per person £3.00 children
from 6.30pm to 11.30pm

**We accept Access, Barclaycard, American Express, Diners Club and LV's**

For reservations phone
081 - 461 5726/7

213 Bromley Road, London SE6
Opening Hours: 12 noon - 2.30pm & 6.00pm - 12 midnight.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்